292

ஜகன்மோகினி

292

ஸ்ரீமதி குமுதினி

விஷய அட்டவணை

ஜகன்மோகன கோபாலன்
அச்சோ! அச்சோ!

ஸ்திரீ எழுத்தாளர்கள்
ஸ்ரீமதி குமுதினி

திருக்குறள் ஸாரம்
(ஆரம்பம்)

சரித்திரம்-சிறுகதை
லலிதகுமாரி

சந்தோஷ வாழ்க்கைக்கு
தேவை யாது?
(ஆரம்பம்)

பொன்னடிகள்
(ஆரம்பம்)

புத்தக உலகம்
(பக்த மாலை)

சித்திர ரகளை

தை மாதத்தில்

14 -8 AUG 1943 MADRAS

மதுரகீதம்

வை.மு.கோ 61 வது நாவல்

BL
894.811, N22 J m
N43·2013
183027

MARCH 1943. Vol. 20. No. 3.
சித்ரபானு மாசி மீ

ஆசிரியை-
வை.மு.கோதைநாயகி அம்மாள்

நாணயம் **நம்பகம்**

நிறைந்த

சுவர்ண மாளிகை

நேர்த்தியான கட்டட வேலைக்கு

உத்திரவாதம்

விதவிதமான நவநாகரீக நகைகள்
ஏராளமாக தயாரிலிருக்கின்றன.



உங்கள் கிரஹ

விசேஷங்களுக்கும்

கல்யாண காலங்களுக்கும் தேவையான கியாரண்டியுள்ள அசல் தங்க வெள்ளி ரத்ன நகைகளுக்கு நாணயமுள்ள ஸ்தலம்.

விவரங்களுக்கு எழுதவும்

C.N.

சென்னை பாரகானிலும் ஆந்திர தேசங்களிலும்

9-வது வாரம்

மார்ச் 4 முதல் மதுரை சிடி சினிமாவிலும், மார்ச் 12 முதல் வேலூர் நியூ ஆபெராவிலும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 AUG 1943
MADRAS



183077.

வெற்றியுடன் ஓடி ஜனங்களின் மனதைக் கொள்ளை கொண்டு ஸ்ரீ ராம நாம தாரகமந்திர சக்தியை போதிக்கும்

வாஹினியாரின் பக்த போதன

உன்னத தெலுங்கு சித்திரம்

ஒவ்வொரு குடும்பத்தாரும் பார்த்து பரவசப்படக்கூடிய படக்காக்ஷி

வட, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி ஜில்லாக்களுக்கும் அதைச் சார்ந்த ஊர்களுக்கும்

உரிமையாளர்கள்:

கந்தன் & கம்பெனி, கோயமுத்தூர்.

மற்றும் திரையிடத் தயாரிலிருக்கும் எமது அடுத்த படங்கள்:

சுமதி, காரைக்காலம்மையார்.

மலருக்கேற்பட்ட மகத்துவம்.

சென்ற இதழில் மோகினி மலரைக் குறித்து சில பிரமுகர்கள் எழுதி யிருந்ததை வெளியிட்டோமல்லவா? இவ்விதழில் இன்னும் சில அபிப்பிராயங் களைப் பாருங்கள்:—

ஸ்ரீமான் காமெடியன் எல். நாராயணராவ்

"...தெய்வீக அம்சம்பொருந்தியது. ஆத்மார்த்தகமான விஷயங்கள் நிறைந்த அரிய பொக்கிஷம் போன்றது. என் சந்தோஷத்தைத் தெரிவிக்க வார்த்தைகளே அகப்படவில்லை. இதுவரை இம்மாதிரி மலரைக் கண்டதேயில்லை. 'கசடாபிசடா' விஷயங்கள், ஆபாசமான கீழ்த்தரமானபடங்கள் எதுவும் இதில் மருந்துக்குக்கூட இல்லை. கட்டுரையாளர்களைத் தேர்ந்தெடுத்திருப்பதிலும், அவர்களுக்கு அளித் துள்ள விஷயங்களிலும் காட்டியுள்ள சிரத்தையைப் போற்றுமலிருக்கமுடியுமா? விளம்பரங்களால் பக்கங்களை ரொப்பவில்லை. ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு வரியிலும் நல்ல ரஸமான விஷயமே வந்திருக்கிறது. மேலட்டையில் வியாஸ பகவானின் படத்தைப் போட்டதிலிருந்தே அதன்மேன்மை விளங்கவில்லையா?..."

ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய்

"...கதைகளை உலகில் பரப்பிய ஆதிகுரு, ஸ்ரீ வேதவியாசர்தான் என்னும் தத்துவத்தைப் பல கதைகளடங்கிய ஒரு மலரின் மேலட்டையில் சித்திரிக்க ஓர் ஸ்த்ரீ முன்வந்தது என்னைப் பரவசப்படுத்தினதில் என்ன ஆச்சர்யம். அது போலவே, சமர்ப்பணமும் மிகவும் பொருத்தமானது......அங்கங்குள்ள சித்திரத் தின் விசித்திரம் செப்பத் தரமன்று......ஒவ்வொரு கட்டுரையும், எழுதியவர் களின் யோக்யதையையும் அவைகளது தலைப்பின் குணத்தையும் வெளிப்படுத்து கிறது.......என் பூர்ண சந்தோஷத்தை நேரில் தெரிவித்தல் சாத்தியமே தவிர, எழுதி முடியாது."

ஸ்ரீமதி குமுதினி

"சபாஷ்! ஸ்வர விழா நாவலும், ஸ்ரீ. ஸாவித்திரி அம்மாள், அம்புஜம்மாள், ஜானம்மாள், ஆகிய எல்லோர் எழுதினதையும் வாசித்தேன். உட்கார்ந்தவள் புத்தகத்தை முடித்துவிட்டே எழுந்தேன். உங்கள் பிள்ளை எழுதியிருப்பது ரொம்பவும் நன்றாயிருக்கிறது. எனது சந்தோஷத்தை அவரிடம்சொல்லவேணும்.

சகோதரி சுபலக்ஷ்மியம்மாள்

"...பேப்பர் பஞ்சமுள்ள இக்காலத்தில் இத்தனை சிறந்த முறையில் நீங்கள் இந்த மலரை பிரசுரித்தது அருமையான காரியம். ஜகன்மோகினி நீண்ட ஆயுளு டன் நம் தமிழ் மக்களுக்கு பக்தி அறிவு ஞானம் இவைகளை விருத்திசெய்து கொண்டிருக்கவேணுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

'ஸ்ரீரங்க ப்ரியா'

"பாண்டவர்கள் விராடபுரத்தில் அக்ஞாதவாசம் செய்ததுபோல், மோகினி கடந்த சில மாதங்களாக வெங்கடாபுரத்தில் உழைத்து வருகிறாள். அக்ஞாதவாஸத் திலிருக்கும் போதும் பாண்டவர்கள் பல அரிய காரியங்களை சாதித்தனர்; அதே போல மோகினி அற்புதமான மலரை வெளியிட்டிருக்கிறாள்...பகவான் கடல் கடைந்து அமுதம் கொண்டு கலசம் நிறைத்து, ஜகன்மோகன வடிவு கொண்டு தேவர்களுக்குக் கொடுத்தாற்போல, நம் ஜகன்மோகினியும் கிராமத்திலுள்ள கோசம்ரக்ஷணசாலையில் புகுந்து, கோவின் க்ஷீரத்தைக் கடைந்து மலர் அமுதம் திரட்டி நமக்கு அளித்துவிட்டாள்..."

இதுபோல் பல கடிதங்கள் வந்து நம்மை மிகவும் உத்ஸாகப்படுத்துகின்றன. பேப்பர் பஞ்சம் எல்லாவற்றையும் பிரசுரிக்க இடம் தாவில்லை. எல்லோருக்கும் என் மனமார்ந்த வந்தனம்.

—வை. மு. கோ.

ஸ்ரீராமஜயம்.

சித்ரபானு ஞு மாசிமீ
மார்ச் 1943

மலர் 20 இதழ் 3

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

Estd. 1923. Vol. 20. No. 3.



பி. ஸ்ரீ

ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்

10. அச்சோ! அச்சோ!

குழந்தை தாயின் இடுப்பில் ஏறுவதற்காக ஓடிவந்து தாயைத் தழுவி அணைத்துக் கொள்ளுகிறதல்லவா? அப்படிச் செய்வது குழந்தைக்கும் இன்பம்; தாய்க்கும் இன்பம்—என்று சொல்லவேண்டியதில்லை. தாயே போய்க் குழந்தையைத் தழுவி எடுத்துத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொள்வதைப் பார்க்கிலும், குழந்தை தானே வந்து தன்னைத் தழுவி அணைத்துக்கொண்டு இடுப்பில் எடுத்துக்கொள்ளும்படி சைகை செய்வதும், வற்புறுத்துவதும் தாயாருக்கு எவ்வளவோ இன்பமாயிருக்கும்! குழந்தைக் கண்ணனும் தாயாகிய யசோதைப் பிராட்டியிடம் ஓடிவந்து அவளை அணைத்துக்கொண்டு தன்னை இடுப்பில் வைத்துக் கொள்ளவேணுமென்று கொஞ்சியிருப்பான்; சொல்லாமல் சொல்லியிருப்பான்; தொந்தரவு கொடுத்திருப்பான்; ஹிம்ஸித்திருப்பான். அந்த நிலையில் யசோதை பரமானந்தம் அனுபவித்திருப்பாள் அல்லவா? அதை யாரால் சொல்லமுடியும்?

மின்னலும் மேகமும்போல் வரவேணும்

அவள் அவனுக்கு அரைச் சதங்கை, கால் சதங்கை, நெற்றிச்சுட்டி முதலியவற்றைப் பொன்னால் செய்து அணிந்து அழகு பார்த்துக்கொண்டிருப்பாள்; அவன் சமீபத்தில் வரும்போதும் அந்த அழகைப்பார்த்து அனுபவிப்பாள்; அவன் தூரத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போதும் பார்த்துக்கொண்டிருப்பாள். அப்படி ஒரு சமயம் விளையாடிக் கொண்டிருக்கும்போதே குழந்தை தாயாரை நினைத்துக் கொண்டு ஓடிவந்து விடுகிறது; எதிரேவந்து அணைத்துக் கொள்ளுகிறது. வரும்போதே 'சலன் சலன்' என்று சதங்கைகள் சப்திக்கின்றனவாம். நீலமேகம் மின்னலோடு வருவதுபோல் ஓடிவருகிறானாம் கண்ணன். அப்படிவந்து அணைத்

தூக்கொண்டு இடுப்பில் ஏறிக்கொள்வதை அவனுக்கு இஷ்டமான சமயத்தில் மட்டும் அல்ல; தனக்கு இஷ்டமான வேறு சமயங்களிலும் அனுபவிக்க ஆசைப் படுகிறது தாயின் உள்ளம். அப்படி விரும்பும்போது ஒரு சமயம்,

பொன்இயல் கிண்கிணி சுட்டி புறம்கட்டி
தன்இயல் ஓசை சலன்சலன் என்றிட,
மின்இயல் மேகம் விரைந்(து)எதிர் வந்தாற்போல்

[பொன்இயல்-பொன்னால் செய்த புறம்-(அது அதற்கு உரிய) இடங்கள். தன் இயல்-தனக்குப் பொருந்திய; மின்இயல்-மின்னலோடு பொருந்திய.]

வந்து தன்னை அணைத்துக்கொள்ளவேணும்-என்று வேண்டிக்கொள்ளுகிறாள். சலன் சலன் என்று சதங்கைகள் சப்திப்பது, மின்னலோடு தோன்றும் மேகத் திலே சின்னஞ் சிறு இடிகள் இடிப்பதையும் ஞாபகப்படுத்துகிறதாம்.

கண்ணன் தன்னை அணைத்துக்கொள்வதை அப்படியெல்லாம் நினைக்கும் போதே அந்தத் தாயின் உள்ளம் ஆனந்தத்தில் மூழ்கிவிடுகிறது. அந்த ஆனந் தத்திலே அந்த நெஞ்சு உருகி உருகிச் சொல் இடிந்து வாய்விட்டு நன்றாக வெளிப்படவில்லையாம். அந்த ஆச்சரியத்தை 'அச்சோ!' என்று குறிப்பிடத் தொடங்கியவள், 'அணைத்துக் கொள்' என்று சொல்லவந்ததையும் மறந்து ஒரு தரத்திற்கு இரண்டுதரம் 'அச்சோ! அச்சோ!' என்று சொல்லிவிட்டு அப்படியே நின்றுவிடுகிறாள் !

பூவும் வண்டும்போல் வரவேணும்

கண்ணன் ஓடி விளையாடும்போது இவள் தலையை வாரி விட்டிருந்தாள்; ஆனால் அந்த விளையாட்டிலே ரோமங்கள் கலைந்து பிரிந்து அந்தச் செக்கிறமான வாய்வரை தொங்கிக் கொண்டிருந்தனவாம்,—செந்தாமரைப் பூவிலே வண்டுகள் மொய்த்துக் கிடப்பதுபோலே. அந்த நிலையிலேயே கண்ணன் ஓடிவந்து தன்னைத் தழுவிக்கொள்ளவேணும் என்று ஆசைப்படுகிறாள்:

செங்கமலப்பூவில் தேன்உண்ணும் வண்டேபோல்
பங்கிகள் வந்(து)உன் பவளவாய் மொய்ப்ப,
சங்குவில் வாள்தண்டு சக்கரம் ஏந்திய
அங்கைகளாலே வந்(து) அச்சோ ! அச்சோ !
ஆரத்தழுவா வந்(து) அச்சோ ! அச்சோ !

[செங்கமலம் செந்தாமரை, பங்கி (இங்கே) ஆண்மயிர். பவளவாய் பவளம் போல் சிவந்தவாய். தண்டு-கதாயுதம். அங்கை-அழகிய கை, ஆரத்தழுவா-திருப்தி உண்டாகும்படி நன்றாய்த் தழுவி.]

யசோதையின் உணர்ச்சிகளோடு பெரியாழ்வாரின் தாயன்பும் அபேதமாய்க் கலந்துவிடுகிறது. அதனால்தான் சங்கு முதலான பஞ்சாயுதங்கள் ஏந்திய அந்த அழகிய கைகளால் தழுவிக்கொள்ளவேணும் என்று வேண்டுகோள். குழந்தைக் கண்ணன் பெரியாழ்வாருக்குத் தெய்வக் குழந்தை; குழந்தைப் பெருமாள். இதே உணர்ச்சியும் அன்பும் கொண்டு வெளிப்படுகிறது பின்வரும் வேண்டுகோளும்.

பஞ்சவர் தூதனாய் பாரதம் கைசெய்து,
நஞ்(சு)உமிழ் நாகம் கிடந்தநல் பொய்கைபுக்கு
அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட்(டு) அருள்செய்த
அஞ்சனவண்ணனே! அச்சோ ! அச்சோ !
ஆயர்பெருமானே, அச்சோ ! அச்சோ !

[பஞ்சவர்-பஞ்ச பாண்டவர், கை; உபசர்க்கம். நஞ்சு உமிழ்-நஞ்சை உமிழ் கின்ற, நாகம்-காளியன் என்ற சர்ப்பம், நற்பொய்கை-(இங்கே) கொடிய மடு, புக்கு-புகுந்து, பணம்-படம்.]

காளியனை அடக்கியது முன்னும் பாரதப் போரை நடத்தியது பின்னும் நிகழ்ந்ததாயினும் பெரியாழ்வாரின் தாயன்பு அந்தச்சரித்திர முறையையும் மறந்து விடுகிறது. ஆம்; அந்தத் தெய்வக் குழந்தையின் சக்திமயமான வடிவழகில் அப் படியே மயங்கிப் போகிறாள் பெரியாழ்வாராகிய யசோதை!

கேதுவாயது மழை. இதனைச் சிறப்பித்து மக்களுக்கு அறிவுறுத்தியது கடவுளின் அரியசெயலை வாழ்த்தியதாகும்.

நீத்தார் பெருமை-நீத்தார்-துறவிகள். இவர்களே அறம்பொருள் இன்பங்களை உலகுக் குணர்த்துகிறவராதலின் இவர்கள் ஆசிரியராவார்கள். இவர்களைச் சிறப்பித்தது ஆசிரிய வாழ்த்தாகக் கொள்ளத்தக்கதாம்.

அறன்வலியுறுத்தல்-அறம்,பொருள்,இன்பங்களைவிடவன்மையுடையது;

சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு-

என்றபடி வீட்டையும் துறக்க முதலிய செல்வத்தையுந் தரவல்லதாய் உயிர்க்குத் தன்னினும் மிக்க ஆக்கமிலாததாய் இலகுவது. ஆதலின் இது தெய்வத்தன்மையின் சிறப்பில்மைகிறது. (அறக்கடவுள்-தரும தேவதை) ஆதலின் இது தரும தேவதையின் வாழ்த்தாகக் கொள்ளத்தக்கதாம்.

உய்த்துணரின் இந்நான்கும்—

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்-"

என்னும் வேதவாக்கின்படி அமைந்த வாழ்த்தென்பது விளங்கும்.

அறத்தாறிது வெனவேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தானிடை-

என்று அறத்தைக் காட்சியளவையில் விளக்கியது பாராட்டத்தக்கதாம்.

இல்லறவியல்

இதில் முதலதிகாரம் இல்வாழ்க்கை என்பது. இது இல்வாழ்வானுக்குரிய அறத்தைக் கூறுகிறது—

(1) இல்வாழ்வானென் பானியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றினின்ற துணை-

என்றபடி இல்வாழ்வான் ஏனைய மூன்று நிலையினரும் தத்தம் அறத்தினின்றும் வழுவாதிருக்கத் துணையாதல்.

(2) துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும்
இல்வாழ்வானென் பான்றுணை-

என்றபடி விலக்கப்பட்டவர், வறிஞர், அநாதை இம் மூவர்க்கும் செய்ய வேண்டியவற்றைச் செய்யுந் துணையாதல்.

(3) தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத் தாறோம்பல்தலை-

என்றபடி பிதிரர், தெய்வம், விருந்து, சுற்றம் இவர்களுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து தன்னையுங் காத்துக்கொள்ளுதல்.

அறம் இயற்ற மக்கட்கு அரியதுணை உடம்பே யாதலின்-அதனையுங் காத்தல் கடனாயிற்று.

இவையன்றித் தென்புலத்தார் கடனைத் தீர்க்க அறிவறிந்த புதல்வனை அடையவேண்டும் - என, புதல்வரைப் பெறுதல் - என்னும் அதிகாரத்தில்—

பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்லபிற
எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

என்ற போதனையில் இன்னுமோரறத்தைக் கூறுகின்றது. இம்மட்டோடு விடவில்லை. தென்புலத்தார் - தெய்வம் இரண்டும் கட்புலனாகாதாரைக் குறிப்பன - ஒக்கல், தான் - இரண்டும் பிறர்க்கிதவில் அமைந்தில. ஆதலின் விருந்தோம்பல் சிறப்புடையது. இதனைக் கருத்துடன் இயற்றல் கடனாம் - என - விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில்—

இருந்தோம்பியில் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு-

என்ற போதனையால் வற்புறுத்துகின்றது. (தொடரும்)

ஸ்ரீமதி "குகப்ரியை"



லலித குமாரி

அந்தப்புரம்; சோகமே உருவெடுத்தாற்போல் உட்கார்ந்திருக்கிறான் அரசன். அரசி கமலினியோ அழுது அழுது முகம் வீங்கிக் கிடந்தாள். ஏன்? லலிதை மொகல் மன்னனது மனைவியாகப் போகின்றாள். பீஜப்பூர் சுல்தானிடம் அவளை ஒப்புவிக்கவேண்டும். வேலைக்காரர்களும் ஒரே கவலையில் ஆழ்ந்தவர்களாய் சித்திரப் பதுமைபோல் நின்றிருந்தனர். ஆனால் அந்த வீரப்பெண் லலிதை புன்னகை தவழும் முகத்தினளாய் நின்றிருந்தாள்.

மணமகள் போல் அலங்கரித்துக்கொண்டு அவள் நிற்பதைக் கண்ட உடன் அரசியின் குமுறல் அதிகரித்தது. அவளைக் கட்டிக்கொண்டு 'ஓ' வென்று கதறிவிட்டாள். அவள் எவ்வளவோ சமாதான வார்த்தைகளைச் சொல்லியும் தாயின் நெஞ்சம் தவித்துக்கொண்டேதானிருந்தது.

ஒன்றையுமே சட்டை செய்யாத பரம வேதாந்திபோல் ஒரே கற்சிலையாய் உட்கார்ந்திருந்தான் அரசன். அந்தச் சின்னஞ் சிறுபெண் சொன்ன ஒரு சொல்லேனும் அவன் செவியில் ஏறவேயில்லை. கடைசியில் அப்பொழுதே தூங்கி விழித்தவன்போல் "லலிதே! என்ன சொன்னாய்!" என்றான்.

அவள் முகத்திலே ஒருவிதமான மாறுதலுமில்லை. மின்னல்போல் ஒரு ஏளனப் புன்னகை அவள் முகத்திலே தோன்றி மறைந்தது. மிகவும் அமைதியான குரலில் "அப்பா! தேவி பவானி உத்தரவு கொடுத்துவிட்டாள். நம் நாடு காப்பாற்றப்படும். ஆனால் தாங்கள் அதன்பொருட்டு ஒரு உயர்ந்த பொருளைத் தியாகம் செய்யத்தான் வேண்டும்" என்றாள்.

"லலிதே! என் செல்வமே! துறப்பதைப் பற்றி அக்னிகுல வீரன் அஞ்சினதுண்டா? அதைப்பற்றி—எதைத் தியாகம் செய்யவேண்டி வருமோ? என்று அஞ்சுகிறவன் வீரனா? லலிதே! வீரன் மகளுக்குரிய வார்த்தைகளை நீ பேசவில்லை."

"ஆம்! நான் வீரர்மகள் பேசவில்லை. உண்மைதான். இருந்தாலும் அப்பா, வீரசங்கிராம சிம்மனது மகள் என்பதைச் செயலிலேயே செய்து காட்டிவிடுவேன்" என்று சிரித்தாள் அவள்.

"லலிதா! இதென்ன வார்த்தை! மானத்தை இழந்து பிறகு வீரன் மகள் நாட்டைக் காப்பாளோ? நீயோ அவனுக்கு மாலையிடுவதாய் ஒப்புக்கொண்டாய். இனி செயலில் செய்து காண்பிப்பதற்கு என்ன இருக்கிறது!" என்று நீர்மல்கும் கண்களுடன் கேட்டாள் அரசி அவள் முகம் கோபத்தால் சிவந்தது.

"கோபித்து என்ன பயன்? உன் கைப்படக் கடிதமும் எழுதிவிட்டாய். இதோ மணக்கோலத்தோடு புறப்படவும் சித்தமாகிவிட்டாய். நகரைக் காக்க இதுதான் சிறந்த உபாயமென்று உன் எண்ணமோ?" என்றாள்.

சோகம் தோய்ந்திருந்த அவள் குரலிலே வெறுப்பும் கோபமும் தொனித்தது. தாயும் மகளும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். இமையாமல் சித்திரம்போல் நின்றிருந்தாள் அவள். ஒருவரை ஒருவர் தேற்ற வகையின்றி மூவரும் தவித்தனர்.

எவ்வளவுநேரம் இந்த நிலையிலிருந்திருப்பார்களோ தெரியாது. நெடு நேரத்திற்குப்பின் தாயின் செவிகளில் ஏதோ சொன்னாள் லலிதை. மறு விநாடி சங்கிராமஸிம்மன் ஆச்சர்ய மிகுதியினால் கண்களை அகல விழித்து "அம்மா! லலிதே எதைத் தியாகம் செய்வது என்றல்லவா சிந்தித்தேன். உன்னை தியாகம் செய்தா உயிர் வாழவேணும்" என்றான். அவன் குரலிலே சொல்லமுடியாத ஒரு ஏக்கம் தொனித்தது.

கமலினியின் கண்கள் ஜ்வலித்தன. சங்கிராமசிம்மனை ஏறிட்டுப் பார்த்தாள். "வீரப் பெண்கள் எப்படி சமயோசிதமாய் நடந்து கொள்ளுவார்களென்பது தங்களுக்குத் தெரியாதா? தேவி பவானி அவளைக் கைவிடமாட்டாள்" என்றாள். விஷயம் விளங்கியது. ஆனால் அவன் அதற்காக வருந்தவில்லை. வீரப் பெண்ணைப் பெற்றோம் என்ற பெருமை முகத்திலே தோன்ற தனக்குள்ளேயே நினைத்தான்.

அன்று ஆமத்நகர் முழுதும் ஒரே கோலாகலம். சுல்தானுக்கே விவாகம் என்றால் ஜனங்களின் உற்சாகத்திற்குக் கேட்கவேண்டுமா? மணமகளோ பாரசீகத்துக் கட்டழகிகளும் கண்டு பொறாமை கொள்ளக் கூடிய பரம சௌந்தர்யவதி. எங்கு பார்த்தாலும் இதே பேச்சு. லலிதையின் வர்ணனை. ஒருத்தி அவளது பொன்மேனியைப்புகழ்வாள். வேறொருத்தி தாமரை இதழை ஒத்த விரல்களைப்பற்றிச் சொல்வாள். இன்னொருத்தி அவளது கோவை இதழ்களையும் அதில் விளையாடும் முல்லைச் சிரிப்பையும் புகழ்வாள். இப்படி ஒரே இன்ப வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தது அந்நகரம்.

"லலிதை பேரழகியாமே!" என்பான் ஒருவன். "அது எப்படியானாலும் சரி. அவள் வலிய நமது சுல்தானையே வரித்துவிட்டாளாம். மணமகனுக்குரிய உடைகள்கூட அவள் கைகளினாலேயே தைத்துவைத்திருக்கிறாளாம். எதிர்கொண்டழைக்கும் பொழுது சுல்தான் அவைகளைத்தான் அணியவேண்டுமென்று கேட்டுக் கொண்டாளாம். "ஹிந்துப் பெண்மணிகள் கற்பிற்கரசிகள் என்று கேட்டதுண்டு. விவாகத்திற்கு முன்பே பதிபக்தி செய்யத் தொடங்கிவிட்டாள் போலிருக்கிறது." என்று புகழ்ந்தான் இன்னொருவன். இவைசுல்தானது செவிகளிலும் வீழ்ந்தன. ஆனந்த மிகுதியினால் பூரித்தான் அவன். இரவு முழுமையும் இன்பக் கனவுகள். லலிதையை அவன் இதற்குமுன் கண்டதுமில்லை. ஏதோ ஒரு கற்பனை உலகில் அவளை சித்திரித்து அழகுசெய்துகொண்டிருந்தான். கணத்திற்கு ஒருமுறை தங்கப்பேலாவில் ஷர்ப்பத்தை ஊற்றிக்கொடுக்க, குடித்துக் குடித்துப் பேரானந்தத்திலே ஊறிக்கிடந்தான். அவன் கண்கள் பாதி திறந்திருந்தன. முத்துக்கற்களுடன் கூடிய விசிறிகளைக் கையிலேந்தி இளம் பணிப் பெண்கள் அவனைச் சூழ்ந்திருக்கும் அகிற்புகையை ஓட்டுபவர்கள்போல மெல்ல மெல்லவீசி நின்றார்கள்.

பொழுது புலர்ந்ததை அறிவிக்க நௌபத்கானுவிலுள்ள பறைகள் ஒலித்தன. அதை ஒட்டி மசூதிகளில் நடைபெறும் பகவன் நாமஸங்கீர்த்தனமும் அவன் செவிகளுள் வீழ்ந்தன. பொன்மயமான ஒரு தேரில் ஏறி இந்தத் திருமணத்தைக் காணவருபவன்போல் சூரியனும் உதித்தான். முரசுகள் முழங்க மணக்கோலம் பூனயச்சித்தமானுன் சுல்தான்.

கோட்டையை அடுத்த ஒரு சிறு குன்றம். அதைச் சுற்றிலும் மிகவும் அழகிய மதுமதி நதி ஓடிக்கொண்டிருந்தது. அந்தக் குன்றின்மேலுள்ள மோதீமஹால் என்ற அரண்மனையில்தான் அவன் வஸந்த காலத்தைக் கழிப்பது வழக்கம். அந்த மோதீமஹாலில் அதி அற்புதமான மணி மண்டபம்தான் மணமண்டபம். முல்லாக்களும் மௌல்விகளும் வந்து மொய்த்தனர். வர்ணப் பட்டாடைகளணிந்த இளைஞரும் முதியவர்களும் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தனர். கட்டியக்காரர்கள் சுல்தானது வருகையை அறிவிக்க, ஆசனத்தில் அமர்ந்தான் சுல்தான்.

ஆயிற்று. அவன் வந்து நெடுநேரமாயிற்று. அவள் இன்னும் வரக்காணும். வெகு அமைதியாயிருந்த அந்த மணவறையில் கசமுசவென்று பேசத் தொடங்கினர்கள். மௌல்வி ஒருவர் மெல்ல எழுந்து லலிதையை சுல்தான் சாமான்யமாய் மதிக்கவில்லை என்றும் அதை மெய்ப்பிக்கவே பலர் முன்னிலையில் விவாகம்செய்துகொள்ளுகிருளென்றும் தெரிவித்து, கடைசியாக அரசிளங்குமாரி தன் கணவனுக்குத் தன் கையினலேயே தயாரித்த உடைகளை அணியும்பொருட்டு அனுப்பிவிட்டு வெளியே சேடியருடன் காத்துநிற்பதாகவும் தெரிவித்தார். ஒரு பேழை அவன் முன் வைக்கப்பட்டது. சுல்தான் மிகுத்த ஆவலுடன் உடைகளையணிந்துதானே எதிர்கொண்டு அவளை வரவேற்க நினைத்தான். உடைகளுக்கடியில் ஒரு சிறு கடிதம். விஷயம் வேறென்றுமில்லை. "அக்னிகுலப் பெண்கள் சூரியனைச் சாக்ஷியாக வைத்தே கணவரை முதன்முதல் பார்ப்பது வழக்கம். ஆகவே அடியாள் கைகளினுற் தைத்த உடைகளை அணிந்து வெளியிலுள்ள நிலா முற்றத்தில் வந்து காட்சி தரவேண்டும்" அவன் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தது.

காலை இளவெயில் அந்தக் கோட்டையைப் பொன்மயமாக ஆக்கிக் கொண்டிருந்தது. மோதீமஹாலின் நிலாமுற்றத்திலே நின்று அந்தச் செங்குத்தான நெடுங்குன்றத்தைச் சுற்றி ஓடும் நதியின் சௌந்தர்யத்திலே ஈடுபட்டவள்போல் அதையே பார்த்தவண்ணம் நின்றிருந்தாள். மெல்லிய ஊதாவர்ணமுள்ள அவளது மேலாடை பறந்து பறந்து அவளது அழகை விளம்பரப்படுத்துவதுபோலிருந்தது. வெற்றிபெற்ற வீரன்போல் அவள் நின்றிருந்தகோலம் அவள் தோழிகளையும் திடுக்கிடச்செய்தது.

முகத்திலே இளமுறுவல் தவழ கரங்குவித்தாள் அவள். பரிவாரங்கள் ஒருவருமின்றி ஒரே ஒரு மெய்க்காப்பாளனேடு நிலாமுற்றத்தின் நடுவே வந்து நிமிர்ந்து நின்றுன் அவன். பொன்னுலும் மணியாலும் இழைத்த அவனது அணிகள் சூரியக் கிரணங்கள் பட்டு மின்னின.

மெல்ல மெல்ல மூடியிருந்த முட்டாக்கை விலக்கியவளாய் மிகவும் மெல்லிய குரலில், "தங்களை மும்முறை வலம் வரவேண்டும் என்ற ஆவல்" என்ருள் அவள். அவளது அழகென்னும் மதுவை உண்ட அவன் குரலின் இனிமையைக் கேட்டுப் புளகித்தான். அவள் வார்த்தைகளை ஆமோதிப்பதன் பொருட்டுமெல்லத் தலையை அசைத்தான்.

பஞ்சினும் மெல்லிய மலரடிகள் நோவ, கால்சிலம்புகள் ஒலிக்க, அவனை வலம் வருவதன் பொருட்டு இரண்டடி நடந்தாள். ஐயோ! வென்றலறினான் சுல்தான். வெயிலில் சற்றுநேரம் நின்ற உடனே அந்த உடைகள்-லலிதை தயாரித்த அந்த அற்புதமான உடைகள்-குபீர் என்று பற்றி எரியத் தொடங்கின. ஓ! வென்ற கூக்குரல். சுருண்டு கீழே விழுந்தான் சுல்தான். அதையடுத்தாற்போல 'ஜே! பவானி!' என்று கூவியவளாய் அருகேயுள்ள அந்த நதியில் தடாலென்று குதித்துவிட்டாள் அவள். ஒரே ஒரு கணம். மறு விநாடி ஒன்றுமே அறியாதவள்போல் வெகு அமைதியாய்ச் சென்று கொண்டிருந்தாள் அந்த மதுமதி.

நினைவிருக்கட்டும்

1. சுவாமி சுத்தானந்த பாரதியார் மோகினியைப்பற்றி எழுதியிருந்ததை சென்ற இதழில் வெளியிட்டிருந்தது நினைவிருக்கலாம். ஸத் விஷயங்கள்--ஆத்மார்த்தகமான உயரிய விஷயங்கள்--இன்னும் அதிகமாக மோகினியில் வெளிவரும். இவ்விதழில் "திருக்குறள் ஸாரம்", "பொன்னடிகள்" என்ற தலைப்புகளில் அரிய விஷயங்கள் ஆரம்பமாகின்றன.

2. பேப்பர் பஞ்சக்காரணமாக மோகினியின் விலையை சிறிது உயர்த்தினோமல்லவா? அதற்குத் தகுந்தாற்போல வாசகர்களுக்கு அதிகரித்த விருந்து அளிக்க முன்வந்துள்ளோம். ஒவ்வொரு பக்கத்திலும் அதிகரித்த வரிகளும், ஒவ்வொரு வரியிலும் அதிகரித்த சிறிய எழுத்துக்களும் போட்டிருப்பதால், முன்பு சுமார் 4 பக்கங்களில் அச்சாகும் விஷயங்கள் இப்போது 3 பக்கங்களுள் அடக்கப்படுகின்றன. சில விவரங்களைக் கவனியுங்கள். (1) முன்பு 41 வரிகள்; இப்போது 49 வரிகள்; (2) முன்பு ஒரு வரியின் அகலம் 25 'எம்'; இப்போது 27 'எம்'; அதாவது ஒவ்வொருவரியிலும் 4 எழுத்துக்கள் அதிகம்; (3) ஒவ்வொரு பக்கத்திலும் தலைப்பில் கதையின் பெயர் அச்சிடுவதற்காக முன்பு உபயோகித்த இடத்தில் இப்போது கதைப் பகுதியே வருகிறது; தலைப்புப் பெயர் இடது பக்க ஓரத்தில் சுருக்கமான இடத்தில் வருகிறது. முன்பு 24 பக்கங்களில் வெளியான கதை, இந்தப் புதிய திட்டத்தில் சுமார் 18 பக்கங்களிலேயே முற்றும் அடங்கிவிடுகிறது. கதைப் பகுதியை அதிகமாக வாசகர்கள் விரும்புவதால் 20 பக்கங்கள் வெளியிட்டுள்ளோம்.

3. ஏற்கெனவே 20-வது ஆண்டிற்கு ரூ. 1-8-0 செலுத்தியுள்ளவர்கள் 10 அணாவும், வருஷ சந்தாவின் ஒரு பகுதியை மாத்திரம் (அதாவது அணா 6, 8, 10, 12, 14, ரூ 1, 1-2, 1-4) அனுப்பியவர்கள் மீதியும் தயவு செய்து கூடியசீக்கிரமே அனுப்பி, டிஸம்பர் முடிவுவரை சந்தாவைப் பதிவுசெய்துகொள்ளும்படிக் கோருகிறோம்.

4. விலாஸம் மாறுகிறவர்கள் நமக்கு உடனே (25-ந் தேதிக்குள்) தெரிவிக்காது, தபாலாபீஸிலும் திருப்பியனுப்ப ஏற்பாடும் செய்யாததால் காபி தவறிவிடின், இனாமாக மறுபடியும் அனுப்ப இயலாது. மூன்றணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

5. விலை அதிகப்படுத்தியும் அதிகரித்த ஆர்டர்கள் வருகின்றன. பேப்பர் பஞ்சக் காரணத்தினால் காபிகளை அதிகரிக்க முடியாததினால் நேயர்கள் முன்னதாகத் தங்கள் காபியை நம்மிடமோ, அல்லது ஏஜண்டிடமோ ரிஸர்வ் செய்துகொள்ளக் கோருகிறோம். மானேஜர்.

ஸ்ரீமதி "ஸமுத்ரா"

ரஸமான சம்பாஷணை

சந்தோஷ வாழ்க்கைக்குத் தேவை யாது ?

இந்தக் கேள்வியைப் படிக்கும்பொழுது, எங்கள் கூட்டத்திலே ஒரே சிரிப்பு அலை கிளம்பிற்று. சுமதியின் முகத்திலே விஷமச்சிரிப்பு "என்ன தங்கம்! இதென்ன மிகப் பெரிய கேள்வியா? யாருக்குத் தான் தெரியாது. பணம்தான் முக்கியமானது என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்யத் தொடங்கிவிட்டாள்.

ரங்கு:—நான் சொல்லுகிறேன். சந்தோஷ வாழ்வுக்கு சங்கீதம் தான் முக்கியம். நன்றாய் பாடக் கூடியவர்கள் பாடினால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் சந்தோஷமாய் கேட்கலாம். அல்லது நமக்கே நன்றாய் பாடத்தெரிந்தால் ஆனந்தமாய் பாடிக்கொண்டிருக்கலாம்.

ஸரஸு:—ரங்கு சொல்வது ஸரியல்ல. சிலருக்குத்தான் பாட்டு பிடிக்கும், அதனால் பாட்டே சந்தோஷ வாழ்வுக்கு அடிப்படை என்று சொல்லிவிடமுடியுமா? இலக்கியம்தான் முக்கியம்.

சுமதி:—எப்படிச் சொன்னாலும் பணம்தான் முக்கியம். பண மிருந்தால்தானே இவையெல்லாம் முடியும்.

தங்கம்:—வாஸ்தவம்தான். ஆனால் பணம் மட்டும் இருந்தால் போதுமா? குணம் வேண்டாமா? குணமிருந்தால்தான் வாழ்க்கை சந்தோஷமாயிருக்கும். அதனால்தான் குணத்தினால் நிறைந்த, அறிவினால் நிறைந்தவர்களுடைய மனம்தான் சந்தோஷத்தை அநுபவிக்க முடியும். ஆகவே நல்ல நெஞ்சம், பரந்த நோக்கம்தான் ஆனந்தகரமான வாழ்வுக்கு ஆதாரம்.

ரங்கு:—நல்ல சினிமா, யாத்திரை, பேச்சு, இவைகள் தான் தேவை. பொழுது எவ்வளவோ சந்தோஷமாய் போகும்.

சுமதி:—நாகரிகம்தான் சந்தோஷ வாழ்வுக்குத் தேவை. பண மிருந்தால் புது, புது பட்டாடைகள் வாங்கி உடுத்திக்கொள்ளலாம். புது மோஸ்தர் நகைகள் வாங்கி அணியலாம். காரில் ஏறிக்கொண்டு நினைத்த இடங்களுக்குப்போகலாம். அடிக்கடி நண்பர்களுக்குவிருந்து வைக்கலாம். ஸங்கீதக் கச்சேரி, சினிமா, வேடிக்கை, விநோதம் எல்லாம் பார்க்கலாம். எல்லாவற்றிற்கும் ஐச்வர்யம்தான் முக்கியம். மனம் எப்பொழுதும் புதுமை வாழ்க்கையைத்தான் விரும்புகிறது. புதுமையை அநுபவிக்க பணமில்லாமல் எப்படி முடியும்? நமக்கு எத்தனையோ விஷயங்கள் தெரிகின்றன. செய்வதற்கு வசதி வேண்டாமா? பணமிருந்தால் எல்லா வசதிகளும் நம்மைத் தேடி ஓடிவருகின்றன. இதனால்தான் பெரியவர்கள் 'பணமில்லார்க்கு இவ்வுலகில்லை' என்று முடிவுகட்டிவிட்டார்கள்.

(தொடரும்)



மதிப்புரை

பக்தமாலை—மலர். 1.—ஆண்டாள்

அரங்கருக்குப் பாமாலை பாடிப் பூமாலை சூடிக்கொடுத்த அன்னவயற் புதுவை ஆண்டாளைப்பற்றி ஸ்ரீ. பி. ஸ்ரீ. ஆசார்யா இயற்றிய இந் நூலுக்கு ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் திவான் பகதூர் வி. பாஷ்யம் அய்யங்கார் மிக மகிழ்ச்சியுடன் முகவுரை எழுதியிருக்கிறார். நூல் எவ்வளவு அழகாக எழுதப்பட்டுள்ளதோ அதைப்போலவே முகவுரையும் வெகு ரஸமாக அமைந்திருக்கிறது.

“அவள் இயற்றிய பாமாலைகளின் பதக்கங்களை எடுத்து அழகாய்க் கோத்து அனைவரையும் களிப்பிக்கக்கூடிய ஒரு காந்தி பொருந்திய ஹாரமாக்கியிருக்கிறார். சொற்ப ஞானிகளுக்கு அணுகவொண்ணாதபடி அகாதமான அவளுடைய வாக்காகிய அந்தக் கடலை இவர் மேட்டில் தேக்கிக் கரைகட்டி, அனைவரும் இறங்கி அவகாகித்து அனுபவிக்கலாகும்படியான சிருங்காரப் பொய்கைகளாகச் சமைத்திருக்கிறார்” என்று முகவுரையில் குறிப்பிடப்பட்டிருப்பது எவ்வளவு தூரம் உண்மை என்பதை எழுதிமுடியாது; படித்து அனுபவித்தால்தான் தெரியும்.

பழைய கதையை புதிய அழகுடன் நமக்குச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். வர்ணனைகளின் அழகை வர்ணிக்க இயலாது. நடையின் ரஸமும் அப்படியே. தமிழுலகிற்கு இப்புத்தகத்தைச் சமர்ப்பிப்பதில் ஆசிரியரின் நோக்கங்கள்—நமக்கு விளங்குகிறபடி—(1) ஆண்டாளைப் பற்றிய அனேக நுட்பங்களை எல்லோரும் அறியும்படிச் செய்வது; (2) திருப்பாவை தவிர நாச்சியார் திருமொழியும் இயற்றியுள்ளாளல்லவா ஆண்டாள்? அனைவரும் இவ்வமுதை ரஸிக்கும் வண்ணம் செய்வது; (3) குருபரம்பரையில் ஆண்டாளைப் பற்றின வரலாறுகளையும், அவளது சொந்த கவிதைகளையும் கவனித்து, ஆண்டாளைப் பற்றின சரியான வரலாறை நமக்கு அளிப்பது; (4)சைவ வைஷ்ணவ சமரஸத்தை எல்லோருக்கும் அடிக்கடி நினைப்பூட்டும் ஆசிரியர் இப்போது சும்மாயிருப்பாரா? “மோகினி”யில் திருப்பாவைக்கும், திருவெம்பாவைக்கும் உள்ள விசேஷ அம்சங்களை விளக்கியிருக்கிறாரல்லவா? இப்போது ஒரு சிவபக்தர் பாடிய ஆண்டாள் கும்மியை நமக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்.

வழக்கம்போல் ஸ்ரீ. பி. ஸ்ரீ. அவர்களுக்கு இது ஒரு மகத்தான வெற்றி. பிரசுரகர்த்தர்கள் இதை இன்னும் விசேஷமாகச் செய்திருக்கலாம். சித்திரக்காரருக்கு குறிப்புகள் சரியாக கொடுக்கவில்லை போலும். (நவநாகரீகமான நிலைக்கண்ணாடி, கட்டில் (modern furniture); ஆண்டாள் சொப்பனத்தில் பால கிருஷ்ணன் வருவதாகக் காட்டியிருப்பது; “கூவாய் குயிலே” என்ற படத்தில் 20-வது நூற்றாண்டு ஆண்டாளைத் தான்காண்கிறோம்.) படங்களிலுள்ள கோளாறுகளுக்கு ஆசிரியர்பொறுப்பாளியல்ல என்று நம்புகிறோம். இது ஓர் அல்லயன்ஸ் பிரசுரம். விலை ரூ. 1/-

—வை. மு. ஸ்ரீ.

பொன்னடிகள்

"கௌண்டின்ய"

பக்தி சம்பத்தும், தமிழ்ச் செல்வமும் நமக்கு அளித்துள்ள பரமஞானிகளான ஆழ்வார் ஆசாரியர்கள் காட்டிய வழியை-அவர்கள் பொன்னடிகளை-பின் பற்றுவதே சிறந்த அறிவுள்ளவர்களின் கடமை. உத்தமமான நிலைமை-மேலான ச்ரேயஸ் (நன்மை) எது? அதை அடையும் சாதனம் யாது? இந்த இரண்டு கேள்விகளையே அவர்கள் தங்களைக் கேட்டுக்கொண்டார்கள். இது விஷயமாக அம் மஹான்களின் அபிப்ராயத்தையும் அனுஷ்டானத்தையும் அனுசரித்து, பகவத் கைங்கர்யம் செய்வதே மேலான புருஷார்த்தம்.

உத்தமமான நிலைமை என்பது தன் நலத்தையே கருதாமல் பிறர் நலத்தையே வேண்டுவதுதான். சுயநலத்தை மாத்திரம் கருதுவது அதமம் (மிகவும் இழிவானது) தன்னுடைய நலத்தையும் இதரர்களுடைய நலத்தையும் கருதுபவர்கள் மத்யமர்கள் (நடுத்தரமானவர்கள்) தன் நலத்தையே கருதாது பிறர் நலத்தைக் கோருபவர்கள் மிகவும் உத்தமர்கள். நம் ஆழ்வார் ஆசாரியர்கள் இவ்வுத்தம கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு கீழ்கண்ட

''அடியார்கள் வாழ அரங்கநகர்வாழ சடகோபன்
தண்டமிழ் நூல் வாழ--கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ''

என்ற வாழிப்பாட்டு ஒன்றுமட்டும் போதாதா! அதன் மகிமையை உணர்ந்தே தினந் தவறாமல் ஒவ்வொரு கோயிலிலும் இதை நாம் பாடி வருகிறோம்.

பிராட்டி, எம்பெருமான்-இவர்களுடைய க்ருபையினாலேதான் இப்படிப்பட்ட உத்தம நிலைமையை ஒருவன் பெறுகிறான். அத்தகைய க்ருபையை அடைவதற்கு அவர்களுடைய சம்பந்தம் அவச்யம் ஏற்படவேண்டும். இதன் பொருட்டு பகவானைமாத்திரம் பிரார்த்திப்பது போதாது; பிராட்டியை முன்னிட்டே அதைப் பெறவேண்டும்.

மனக்கண்முன் பகவானையும் பிராட்டியையும் பார்த்து, பக்திப் பெருக்கில் ஈடுபட்டு அவர்கள் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்ரமாவது எல்லோருக்கும் இயலாது. அர்ச்சாவதாரத்தில்-அதாவது அர்ச்சிக்கப்படும் ரூபத்தில் திவ்யமங்கள விக்ரஹமாக எழுந்தருளியிருக்கையில் பிரார்த்திப்பதே நமக்கு ஸுலபமாக ஏற்படுகிறது. அவ்வாறு க்ருபைக்குப் பாத்ரமாகும்போதே பிறர்நலத்தை விரும்பும் உத்தமநிலை ஏற்படுகிறது. இதுவே ஆழ்வார் ஆசாரியர்கள் காட்டியவழி.

புண்ய க்ஷேத்ரங்களில் திவ்யமங்கள விக்ரஹமாக வீற்றிருக்கும் பிராட்டியையும் பரந்தாமனையும்ஸேவித்து-அவர்களைப்பாடி, புண்ய தீர்த்தங்களில் நீராடி, பக்தியாத்திரை செய்து முக்தியை அடைந்தவர்கள் அல்லவா நம் ஆழ்வார் ஆசாரியர்கள்? பகவானைப் பிரார்த்திப்பதில் ஒரு யுக்தியையும் சொல்லித்தந்துள்ளார்கள். பிராட்டியைப் பணிந்து அவள்மூலம் எம்பெருமானை அடையவேண்டும் என்று புருஷகார வைபவத்தை நன்குணர்ந்த அவர்கள், நமக்கு இந்த ஸுலபமான வழி காட்டியுள்ளார்கள். அன்னையின் இளகிய மனதை குழந்தை தன் அனுகூலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்வது போலல்லவா இருக்கிறது இது என்று சொல்லவும் வேண்டுமா?

நிற்க, பகவானின் அர்ச்சாவதார மகிமைதான் என்னே! அதில் ''பகவானே! நீ பல்லாண்டு பல்லாண்டாய் நன்றாயிரு'' என்று சுயநலமற்ற நம் ஆழ்வார்கள் பக்திப் பெருக்குடன் மங்களா சாஸனம் செய்துள்ளதின் மகத்வம்தான் என்ன!

ஆக, புருஷகார வைபவம், அர்ச்சாவதார மகிமை, மங்களாசாஸன மகத்வம் என்ற தலைப்பில் விவரமாக வெளியிடப்போகும் விஷயங்களை மோகினி அன்பர்கள் தொடர்ந்து படித்து, குற்றங் குறைகளைப் பொறுத்து, குணத்தை மாத்திரம் ஏற்றுக்கொண்டு பயன் பெறும்படி பிரார்த்திக்கிறேன்.

மதுரகீதம்

வை. மு. கோ. 61 வது நாவல்

வை. மு. கோ. எழுதிய 60 நாவல்கள்

ரூ. 2—8
வைதேகி
ராதாமணி
சாருலோசனு
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2
நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1—12
சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
தயாநிதி
ஞானதீபம்
வாத்ஸல்யம்

ரூ. 1—8
சோதனையின்
கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

ரூ. 1—4
பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனுதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச் சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை
சுவா நிலயம்

ரூ. 1
சுகந்த புஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திர மண்டலம்
கருணலயம்
க்ருபாமந்திர்

அணு 14
கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணு 12
* கதம்பமாலை

அணு 10
பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணு 8
நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின்
பரிபவம்
பிச்சைக்காரக்
குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
மாலதி
வத்ஸகுமார்
படகோட்டி

அணு 6
புஷ்பமாலிகா
சுடர் விளக்கு

அணு 4
மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
* ஸரஸராஜன்
உளுத்த இதயம்

ஜகன்
மோகினி
பிரசுரம்

18307
-600 0
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 AUG 1943
MADRAS

வை.மு.கோ.

மதுரகீதம்

௭-வது நாவல்



ஶ்ரீ

உலகளந்த உத்தமா உன்பொன்னடிகள் போற்றி
மலைஎடுத்து மழைதடுத்த மலர்க்கரங்கள் போற்றி
மதுரகீதம் பொழியும்இன்ப அதரமலர்கள் போற்றி
விதுரர்மகிழ விருந்துண்ட விமலக்கண்ணா போற்றி.

மதுர கீதம்

"ஆஹா ஹா!...என்ன அத்புதமான கானம்! எத்தனை ஆனந்தப்பரவசமூட்டும் மதுரம் சொட்டுகிறது பார்த்தாயா! இத்தனை குரல்களுக்கிடையில் நமது கண்மணி, நமது செல்வி, கிருபாவதியின் குரல்தான் கம்பீரமாயும் கணீரென்றும் கேட்கிறது. இப் பாடலைக் கேட்கும் போதே அந்த சாக்ஷாத் கண்ணபிரானின் திவ்ய தேஜஸுடன் கூடிய சுந்தர வதனம் கண்முன்பு காக்ஷியளிப்பதுபோல் தோன்றுகிறது. இல்லையா?" என்று வயது முதிர்ந்த கிழவர் தம் மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

செல்லம்மாள் சிரித்துக்கொண்டே "ஆமாம். உங்களுடைய காதுக்கு உங்கள் மருமாளின் கானம் அத்புதமாயும் மதுர கீதமாயும் ஒலிப்பதுபோல் மற்ற மாணவிகளின் உற்றார் உறவினர்களுக்கும் அவரவர்களது குழந்தைகளின் சங்கீதம் இப்படித்தான் தோன்றும், இது உலகத்தில் சகஜந்தானே" என்றாள்.

சதாசிவன் கடகடவென்று சிரித்துக்கொண்டே 'செல்லம்! என்னை பக்ஷபாத மனிதன் என்று பட்டம் சூட்டிவிட்டாயா! இருக்கட்டும், நான்மட்டும் க்ருபாவதி யைக் கொண்டாடுவதாக நினைக்காதே! வேணுமானால் பொது மனிதர்களைக் கூட்டி இதே பள்ளிக்கூடத்து மாணவிகளைப்பாடச் செய்துக் கேட்கவைக்கலாம். காரிருளையும் பிய்த்துக்கொண்டு கண்களைப் பறிக்கும் பிரகாசத்துடன் ஒரு மின்னல் ஜோதி உண்டாவதுபோல் இத்தனை கீச்சுமாச்சு பயங்கரக் குரல்களை யெல்லாம் மீறிக்கொண்டு நம் க்ருபாவதியின் மதுர கண்டத்வனி வருகிறதைச் சொல்கிறார்களா, இல்லையா!...நீயே சொல்லு.

செல்:—சரி...சரி...நான் இப்போது உங்களுடன் சண்டைக்கு வரவில்லை. **"காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு"** என்கிறபடி கழுதைபோல் கத்தினாலும் அவரவர் குழந்தைகளின் குரல் அமுத மழை பொழிவதுபோலத்தான் தோன்றும், அது கிடக்கட்டும், நானும் எத்தனையோதரம் சொன்னேன். இப்போதும் என் கடமை என்று சொல்லுகிறேன். க்ருபாவதி என்ன சின்ன குழந்தையா! 15 வயது ஆகிவிட்டது. புத்தியறிந்த பெண்ணைப் படிக்கவைக்க வேண்டாமென்று முட்டிக்கொண்டும் கேட்பதில்லை. பெண்கள் பள்ளிக்கூடந்தானே படித்தால் என்ன என்று வாதம் செய்கிறீர்கள்? படிப்பதுடன் மட்டும் நிற்காமல் ஏதோ ட்ராமாவாம், கூத்தாம், க்ருபாவதிக்குத்தான் ஸ்ரீ கிருஷ்ணன் வேஷமாம்; எதிர் வீட்டு சூடாமணிக்கு ராதா வேஷமாம், இதெல்லாம் எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை...

சதா:—அடேயப்பா! பிடிக்கவில்லை என்றால் என்ன செய்யவேண்டும் என்கிறாய்?

செல்:—செய்வதாவது, தகப்பனில்லாக் குழந்தையை யாரோ மாமனும் மாமியும் வளர்த்தார்களாம். புத்திசாலியாக வீட்டுவேலை செய்யவும் குடும்பநிர்வா கம் பண்ணவும் தெரியவில்லை. கூத்தாடிபோல் ஆடிப் பாடுவதுதான்தெரியும்... என்று இளப்பமாகச் சொன்னால்...உங்கள் தங்கைதான் ஒன்றுமே காதில் போட்டுக்கொள்வதில்லை. நாளைக்கு அபவாதம் யாரைச்சாரும்?

சதா:—சரிதான் போ...நல்ல சமயத்தில் ஏதோ வளவளவென்று கொட்டி அளக்கிறாய்...யார் எது வேணுமாயினும் சொல்லட்டும். என் கண்மணியின் சங் கீதத்தை ஆதரிக்கும் ரஸிகனுக்குத்தான் அவளை மணம் செய்விக்கப்போகிறேன். வீண் வம்பு பேசாதே...குழந்தைகள் பாடி ஒத்திகை பழகுகிறார்கள். கர்ண மிருதமாக இருக்கிறது; சற்று நீயும் கேட்டு இன்புறுவதுதானே...ஏதோ யோசனை தோன்றுகிறதாக்கும். பேசாமல் போ...அடாடா... இந்த பாட்டின் அர்த்தம் அப் படியே கண்முன்பு என்னப்பன் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஸ்வரூபத்தையே காட்டுவதுபோல் மெய்மறக்கச் செய்கிறது.

செல்லம்:—ஓகோ! இப்பொழுது திடீரென்று இந்த ஊரே ஸ்ரீ வைகுண்ட மாகிவிட்டதா! அதான் பகவான் பக்தனுக்கிரங்கி காக்ஷி கொடுக்க வந்துவிட் டாராக்கும்...ஏனென்றால் நீங்கள் பரம பாகவத சிகாமணியோன்னோ? அதனால் பகவான் உங்களை வீடு தேடி வந்துவிட்டார்போலும், இந்த உப்புசப்பில்லாத விஷ

யங்களில் காலத்தை யோட்டுவதில் என்ன லாபமிருக்கிறது? கிருபாவதிக்கு வயது ஆகிவிட்டது. நாம் இருவரும் சற்று சக்தியோடு இருக்கும்போதே கல்யாணத்தைச் செய்தால்தானே நல்லது. இப்படி செவிடுபோலிருந்தால் என்ன செய்வது !—

என்று மேலே பேசுவதற்குள் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து, "குமாரி கிருபாவதிக்கு என்று வந்திருக்கிறது. இந்த வீடுதானா?" என்றான்.

"கிருபாவதிக்கா!...ஐயோ பாவம். அந்த பரதேசிக்குக் கடிதம் எழுதுகிற வர்கள் யார் இருக்கிறார்கள் ?" என்று யோசித்துக்கொண்டே கடிதத்தை வாங்கிப் பார்த்தார். அவர் சிறிது ஆங்கிலம் படித்தவராதலால் கடிதம் **ஆகாசபுரி** ரேடியோ நிலயத்திலிருந்து வந்திருப்பதையறிந்து பெரும் வியப்புடன், "ஆமாம்; எங்கள் குழந்தைதான் அவள். கொடு கொடு" என்று கடிதத்தைப் பிரித்துப் படிக்கவாரம்பித்தார்.

ரேடியோ நிலயத்தில் 15-ந் தேதி மாலை 6 மணிக்குப்பாடவேண்டுமென்றும் அதற்காகப் பணம் கொடுப்பதாகவும் கண்டிருந்ததைப் படித்து ஆனந்தப் பூரிப்புடன், "இதோ பாத்தியாடீ ! நான் கனவில்கூட நினைக்கவில்லை. நமது கிருபாவதியை ரேடியோவில் பாட அழைத்திருக்கிறார்கள். குழந்தை, உலக ப்ரஸித்தமான காயகி ஆகிவிடப்போகிறாள் பாரு...

சேல்:—வேறு என்ன குறைச்சல்? பள்ளிக்கூட படிப்புக்கே நான் ஆட்சேபனை செய்கையில் கச்சேரிக்கு வேறு தயார் செய்துவிட்டு நீங்கள் தாளம் தட்டித் தலையாட்டப்போகிறீர்களா ! சரிதான்...புத்திதான் ஏதோ பிசகிப்போய் விட்டது—என்று சற்று கோபம் த்வனிக்கும் குரலில் பேசியவாறு உள்ளே போய்விட்டாள்.

அதே சமயம் சிரித்துக்கொண்டு முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடும் சோபையுடன் புள்ளிமான் போன்று துள்ளியவாறு கிருபாவதி ஓட்டமாக ஓடி வந்து, "மாமா! மாமா! ஒரு அதிசயமான விஷயம் இப்போது உங்களுக்கு நான் கொண்டுவந்திருக்கிறேனே!" என்று அளப்பரிய ஆர்வத்துடன் கூறினாள்.

மாமாவும் சிரித்துக்கொண்டே..."குழந்தாய் ! உனக்குக்கூட நான் ஒரு ஆச்சரியமான விஷயத்தைச் சொல்லப்போகிறேனே...முதலில் நீ சொல்லிவிடு. பிறகு நான் சொல்கிறேன்" என்று கூறியவாறு சிறுமியைத் தட்டிக்கொடுத்தார்.

கிரு:—இல்லே மாமா! முதல்லே நீங்கதான் சொல்லணும்...

சதா:—நீதான் சொல்லவேண்டும்.

கிரு:—சொல்லட்டுமா...எங்க டீச்சர் வீட்டில் நான் ஒருநாள் பாடினேன் பாருங்கள். அன்று ஒரு கனவான் கூட இருந்தார் என்று சொன்னேனே; அவர் ரேடியோ நிலயத்தைச் சேர்ந்தவராம். அவர் என் பாட்டைக் கேட்டு பரம சந்தோஷப்பட்டு 15-ந் தேதியன்று ரேடியோவில் பாடுவதற்கு ஏற்பாடுசெய்து, எங்க டீச்சருக்குக் கடிதம் எழுதிவிட்டாராம். 30 ரூபாய் கொடுக்கப்போகிறார்களாம்—என்று பொங்கி வரும் சந்தோஷத்துடன் கூறினாள்.

"இதோ பாத்தியா ! கண்ணு...ரேடியோவிலிருந்தே கடிதம் வந்திருக்கிறது. இதைத்தான் உனக்குச் சொல்ல நினைத்தேன் பேஷ். இருவருடைய ரகஸியமும் ஒரே விஷயமாக முடிந்ததே. பேஷ்! உன் மதுரகீதத்தைக் கேட்கும்போதெல்லாம் நீ எப்போது ரேடியோவில் பாடி நான் கேட்டு மகிழப்போகிறேன் என்று மிக்க ஆவலுடன் எதிர்பார்த்தேன். பகவான் என் பங்கில் இருந்து எனது ஆசையைப் பூர்த்தி செய்துவிட்டார். எந்தெந்த பாட்டுக்கள் பாடுகிறாயோ, அவைகளைச் சற்று நிதானமாகப் பாடி நன்றாகப் பழக்கிக்கொண்டு ஜமாய்த்துவிடு. மாஸம் ஒரு சான்ஸ் கொடுத்தால் உனக்கும் உன் தாயாருக்கும் இனி கஷ்டமே இல்லை. வயிற்றுக் கொடுமைக்காக அவளும் ஒரு வீட்டில் சமையல் செய்ய வேண்டாம். இங்கேயே வந்துவிடும்படி எழுதிவிடுகிறேன். 15-ந் தேதியன்று ரேடியோ கேட்கும்படியும் மற்ற விஷயங்களையும் விரிவாக எழுதிவிடு. இந்த நிலயத்திற்கும் இன்றே ஒப்புக்கொண்டு கடிதம் எழுதிவிடுகிறேன். கையெழுத்துப்போடு" என்றார்.

புதிதாக ஒரு பதவியோ, சொர்க்கபோகமோ கிடைத்து விட்டது போன்ற பேரானந்த எழுச்சி அச் சிறுமியின் தளிர் போன்ற இதயத்தில் கொந்தளித்தெழுந்தது. உடனே இச் செய்தியைத் தனது வாத்யாரம்மாளிடம் தெரிவிக்க உள்ளம் துடித்தது; ரேடியோ கடிதத்துடன் ஓடினாள். அவளுடைய முகத்தில் கூறத்திறமற்ற தேஜஸ் தாண்டவமாடியது.

2

"அத்புதம், ஆனந்தம், இனிமையான இசை, ஈடிலா இன்பம், உள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்து களிப்பூட்டும் நாதம். எங்கும் ஏற்றித்தொழும் ஐயன் திருநாமத்தின் ஒப்பிலா மகிமை பெருகி ஓடும் சாகித்யம். ஆஹா ஹா!...எத்தகைய கானம்ருதம். ஔதார்யவள்ளலின் குணத்தைச் சித்திரிக்கும் பாட்டின் மகிமையே மகிமை... இந்த காலத்திற்குத் தகுந்த ராகத்தின் சுகமே சுகம்! ச்சுச்சுச்சு"...என்று தன்னையே மறந்து கானம்ருதத்தில் ஈடுபட்ட **முரளீதரன்** தன் தாயாரிடம் கூறினான். அவனுடைய தாயார் பலமாக நகைத்துப்பின் "ராஜா!" என்று கூப்பிட்டாள்.

நண்பனாகிய **நாகராஜன்** கடகடவென்று நகைத்தபடியே முரளியின் தோள்களைப்பிடித்து ஆட்டிக் குலுக்கி "பேஷ்! முரளீ! பலெபேஷ்! ரேடியோவில் பாடும் இந்த குமாரியின் பாட்டை எத்தனைபேர்கள் கேட்கிறார்களோ! எத்தனை பேர்கள் சுவிச்சை மூடியே இருக்கிறார்களோ! நீ மட்டும் இந்த ரேடியோவுக்கும் ஓய்வு கொடுக்காதே; குமாரிக்கு ஆசி கூறுவதையும் விடாதே." என்று பரிகாஸம் செய்தான்.

"ஆமாண்டாப்பா! இதைப்போன்ற வேலை உனக்கேது சொல்லு பார்க்கலாம். ஏதோ நீ பிறந்தக்ஷணமே உன்னைப்பார்த்து 'என் மாப்பிள்ளை' என்று நல்ல சுபமுகூர்த்த வேளையில் உன் மாமா நல்ல வாயால் சொன்னார்; சொன்னதுபோல் பலித்துவிட்டது. இவனுக்குந்தான் மாமனுக்குக் குறைவில்லை. மாமன்களின் மகளுக்கும் குறைவில்லை; டெஜன் கணக்கில் இருக்கிறார்கள். ஒன்றுவது காதுக்கினிமையும் கண்ணுக்கு ஆனந்தமும் சேர்ந்த ஸ்வரூபமாக இல்லையே? என்ன செய்வது? முரளிக்கு வயதும் 24 ஆகிறது. சின்ன பாப்பா இல்லை, எதைப் பார்த்தாலும் எனக்கே பிடிக்கவில்லையே? அவனுக்கு நான் எப்படிச் சொல்வது! அழகில் மகாலக்ஷ்மியைப்போன்றும் கல்வியில், கானத்தில் சரஸ்வதியைப் போன்றும் இருக்கும் பெண்தானப்பா வேண்டும். ஏதோ காடெமூடே என்று செய்வதில் எனக்கு இஷ்டமே இல்லை. 'கோடாலு நலுபைதே குலமந்த நலுபு' (மருமகள் கருப்பானல் வம்சமே கருப்பு என்று அர்த்தம்.) என்று பழமொழியுண்டு. அதையே என் மாமியார் அடிக்கடி சொல்லித் தேடித்தேடி என்னைப் பொருக்கினராம். முரளியோ ராஜாவைப்போல் பிறந்திருக்கிறான். அவனுக்கேற்ற ஜோடி வேண்டாமா என்றுதான் நான் தேடுகிறேன்" என்றாள்.

முரளியின் தகப்பனார் ஆபீஸிலிருந்து வருவதை காரின் சப்தத்தாலறிந்து கொண்டு பார்வதியம்மாள் கணவனைக் கவனிக்கப்போய்விட்டாள்.

முரளீ:—நாகராஜன்! என்னைப் பரிகாஸம் செய்வதில் பயனில்லை. உண்மையில் இந்த சங்கீதத்தை நீ வெறுக்கிறாயா, விரும்புகிறாயா... ஆஹா!...என்ன கமகம்! சாரீரத்தில் தான் என்ன ஜ்வலிப்பு! என்று கண்ணை மூடிக்கொண்டு கேட்கவாரம்பித்தான்.

நாக:—முரளீ! நான்மட்டும் சங்கீதத்தை விரும்பாத ஜடம் என்று நினைத்தாயா! உன்னைவிட அதிகமாக எனக்குக் கேட்கவும் விருப்பம். நான் பாடக்கூடத் தயாராயிருக்கிறேன் தெரியுமா! நீ என்னவிருந்தாலும் ஒரே பெண்ணிடம் சகல அம்சங்களும் நிரம்பியிருக்கவேண்டுமென்று எதிர்பார்த்தால்முடியுமா! ஏதாவது ஒன்று சற்று குறைவாயிருந்தால் அதைப் பொருட்படுத்தக்கூடாது. உனக்குமேல் உன் தாயார் நோணுவட்டம் பார்க்கிறார்கள் என்னசெய்வது?

முரளி:—நாகர்ராஜ்! நீ என்னவோ கல்யாணம் செய்துகொண்டுவிட்டதால் சொர்க்கப்பதவியிலிருப்பதாக நினைக்கிருய். உன் மனைவியின் குரலைக் கேட்கும் போதே எனக்கு வெறுப்பாகவிருக்கிறது. பெண் குரலா! பேய்க்குரலா என்று பிரமித்தேன். நீ மகா பொறுமைசாலியப்பா! என்னல் அம்மாதிரி இருக்கமுடியாது, பணத்திற்கு என்னவோ நான் பறக்கவில்லை. எங்களுக்கிருக்கும்பொருளை வைத்து ஆள இன்னும் 10 பேர் இருந்தாலும் போதாது. ரதியைப் பழிக்கும் அழகும் சரஸ்வதிக்கு நிகரான சங்கீதமும் இருந்தால் போதும்.

நாக:—அப்பா! நீ என்னதான் சொல்லு. என் **கண்ணம்மாள்** எனக்கு ரதிக்கும் மேலாகத்தான் தோன்றுகிருள். சங்கீதம் இல்லை என்பதனல் அவளை வெறுக்கவில்லை. அவள் பேசும் அழகே சங்கீதம் இசைப்பதற்குமேல் என் காதிற்குப் படுகிறது. உனக்கு எப்படித் தோன்றினல் எனக்கென்ன! அதிருக்கட்டும், நீ இப்படி நூற்று நூற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தால் வயதெல்லாம் சென்று கிழவனுகத்தான் ஆய்விடுவாயோ என்று பயமாயிருக்கிறது.பிள்ளையார் கல்யாணமும் உன் கல்யாணமும் ஒன்ரு அல்லது சஷ்டியப்தபூர்த்தியுடன் கல்யாணமும் நடக்குமோ!

முரா:—போடா! போக்கிறித்தடியா! அறுபதாம் கல்யாணமும் கல்யாணமும் ஒன்ருகத்தான் நடக்கட்டும், அப்போதும் நான் தீர்மானித்தபடியே பெண் கிடைத்தால்தான் செய்துகொள்வேன் தெரியுமா?

நாக:—அப்படி சொல்லடா ராசாமவனே! சரி...இனிமேல் நீ பிள்ளையாரைப்போலத்தான் சந்திக்கு சந்தி உட்கார்ந்து, பெண் தேடப்போகிருயா!

முரா:—சீச்சீ! வாயாடீ!...என்னைப் படைத்த கடவுள் எனக்கென்று ஒரு பெண்ணைப் பிறப்பித்துத்தான் இருப்பான். தெரியுமா! நான் ஒரு புதிய தீர்மானம் செய்திருக்கிறேனே! அதற்கு உன்சகாயமும் சற்றுதேவையாயிருக்கிறது.

நாக:—என் சகாயமா! அதென்னப்பா! சொல்லிவிடு. இப்போதே செய்கிறேன். பத்திரிகைகளுக்கு விளம்பரம் எழுதவேண்டுமா! உன் புகைப்படங்களை மாதிரிக்கொன்று பிரசுரிக்கவேண்டுமா, ஜாதகங்கள் நகல்கள் எடுக்கவேண்டுமா!

முரா:—டேய்! எனக்கு கோபம் வந்தால் உன்னை அடித்துக்கூடவிடுவேன். வெறுமனே வாயாடாதே! உனக்குப்போய் நாகராஜன் என்று பெயர் வைத்தார்களே! அவர்கள் முட்டாள்கள்தான். **"வாயாடி வெங்கிட சுப்பன்"** என்று வைத்திருந்தால் மிகவும் பொருத்தமாயிருக்கும்.

நாக:—முரளீ! சொன்னலும் ஒரு சொல்லு அழகாகச் சொன்னய். முரளீதரன் என்கிற பெயரை உனக்கு என்ன காரணமாக வைத்தார்களோ! தற்போது கட்டாயம் அந்த பெயரை மாற்றி **"பெண் வேட்டைக் கண்ணுச்சாமி"** என்ருல் வெகு அழகாக இருக்கும். இப்போதுதான் என்ன முழுகிவிட்டது. நாம் இருவரும் புதிய நாமகரண உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்திக்கொள்ளலாமா!...

முரளிக்கும் அடக்கமுடியாத நகைப்பு வந்துவிட்டது. சிரித்துச் சமாளித்துக்கொண்டு...**"பெருமாள் பெரிய பெருமாள்"** ஆன கதையைப்போலத்தானிருக்கிறது நமது பேச்சு. அது கிடக்கட்டும். அப்பா வெளியே போவதற்குமுன்பு நாம் சற்று வெளியே போய்வரவேண்டும். காரை அப்பா எடுத்துக்கொண்டுபோனல் இரவு 8 மணிக்குமேலாகும்- கிளம்பு" என்று கூறியபடி உத்தரியத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு கிளம்பினன்.

நாக:—புறப்படும்போது எங்கே, ஏது என்று அபசகுனம்போல் கேட்கிறேன் என்று நினைக்காதே. போகவேண்டிய இடத்தைச் சொன்னல் கொஞ்சம் ஷோக்காக அப்டீ...ஜில்லென்று...ட்ரஸ் பண்ணிக்கொண்டு வருவேன்.

முரா:—ட்ரஸ்ஸூம் வேண்டாம். அட்ரஸூம் வேண்டாம். கிளம்பப்பா!—என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியேவந்தான்.

"அப்பா! நான் சற்று வெளியே போய் வருகிறேன்" என்று கூறிக்கொண்டே காரில் உட்கார்ந்தான். அடுத்த நிமிடமே காரும் தனது சங்கீத இசையுடன் கிளம்பியது.

மதுர கீதம்

"பார்வதி! பார்வதி! இங்கு வா! முரளி எங்கேயோ வெளியில் போவதாகக் கூறிவிட்டுப் போய்விட்டானே! எங்கு போகிறான் தெரியுமா! இன்று செல்லப்பாவின் வீட்டில் கல்யாணமாச்சே, அதற்குக் காலையிலேயே போக நினைத்தேன். ஆபீஸ் வேலையால் போகமுடியவில்லை. இப்போது போகவேண்டும். அங்கு செல்லப்பாவின் தங்கைப் பெண் வந்திருக்கிறதாம். அதைப்பார்த்துவிட்டு வரலாம். இவன் எங்குபோனான்" என்றார்.

பார்:—எனக்குத் தெரியாதே. நான் காலையில் முகூர்த்தத்திற்கே சென்றிருந்தேன். அடாடா! என்ன வைபோகம்! என்ன ஆனந்தம், அந்த அழகைச் சொல்லவேமுடியாது. உம். நம்ப முரளிக்குத்தான் வேளை வரவில்லை.

விச்வநாதன்:—ஆமாம்; நீங்கள் தாயும் மகனும் எதையும் உருப்படவிடப் போவதில்லை. இப்படி ஆராய்ந்துகொண்டிருந்தால் நாம் சஷ்டி பூர்த்தி செய்து கொள்ளும்போதுகூட உன் மகன் ஒண்டிக்கட்டையாகத்தான் நிற்கவேண்டும். எனக்கு உங்கள் ஆராய்ச்சி பிடிக்கவே இல்லை. கூடுமானவரையில் சுமாராகத் தேடிப்பிடித்து ஒரு கல்யாணத்தைச் செய்தால்தானே...

பார்:—நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பழிக்குப் பாத்திரம் நாங்கள்தானா! கடவுளின் கிருபை நிறைந்த வேளை வரவேண்டாம்போலிருக்கிறது. கல்யாணத்தைச் சீக்கிரம் செய்யவேண்டுமே என்கிற ஆசைக்காக கண்ட மூதேவிகளையும் கட்டிவிடமுடியுமா! பார்த்தாலும் பசியாறவேண்டாமா! "உன்னுடைய நாட்டுப் பெண்ணா இவள்!" என்று பிறர் கேட்பதற்கு கம்பீரமாக தலை நிமிர்ந்து பதில் கூறி பெண்ணைக் காட்டவேண்டாமா!

விச்வ:—போதும்! போதும்...குடித்தனம் உருப்பட்டாப்போலத்தானிருக்கிறது. நீங்கள் எப்படியாவது துலைந்துபோங்கள் என்று கூறுவதற்கு முடியவில்லை. வெளியில் இருப்பவர்கள் என்னைக் குத்தி வதைக்கிறார்கள். வயதும் ஆயிற்று. படிப்பும் முடிந்தது. அதிர்ஷ்டவசமாக நல்ல உத்யோகமும் கிடைத்திருக்கிறது. பணத்திற்கும் குறைவில்லை. கல்யாணம் செய்யாது வைத்திருந்தால் பையனுக்கு ஏதோ ஒருவிதமான இழுக்கையல்லவா ஜனங்கள் கற்பனை செய்துவிடுகிறார்கள். "வியாதியோ! வக்கையோ! தாசிலோலனோ! என்ன குறைவோ!" என்று பேசும்போது மனம் கலங்குகிறது. நான் என்ன பதில் சொல்வது? அந்த உணர்ச்சி உனக்கில்லையா?

பார்:—வெகு அழகுதான். விடிய விடிய இன்னும் 24 வயதாகவில்லை. இதற்குள் வம்பெதற்கு தும்பெதற்கு? பாழாப்போன நம் தேசத்தில்தான் இந்த மாதிரி சங்கடங்கள். வெளி நாட்டில் பாருங்கள். 30, 40 வயது கழித்துக்கூட கல்யாணம் செய்துகொள்கிறார்கள். அங்கு இந்தமாதிரி வம்புண்டா?

விச்வ:—சேச்சே...வாயைமூடு. உதாரணங் காட்டுகிறாள் உதாரணம்... வெளிநாட்டைப்போலத்தான் நம் நாட்டில் சகலமும் இருக்கிறது பாரு. வெளிநாட்டின் அனுஷ்டானத்திற்கும் நம் நாட்டின் அனுஷ்டானத்திற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்யாஸம் உண்டு. அதை ஏன் பேசுகிறாய்? உன் தம்பி பெண் சரஸாவுக்கு 14 வயதாகியும் விவாகம் செய்யவில்லை என்று நீயே என்ன ஆட்டம் ஆடினாய். எத்தனை தூரம் நாக்கை வளைத்து வம்பு பேசினாய். வெளிநாட்டில் பெண்களுக்கும் 30 வயது கழித்து விவாகம் செய்கிறார்கள். அதுபோல் நீயும் பேசாமலிருப்பதுதானே! வெளிநாட்டில் **டைவர்ஸூம்** மண்ணுங்கட்டியும் சகஜமாக செய்கிறார்கள். உன் தங்கை பெண்ணை அவள் கணவன் தள்ளி வைத்திருக்கிறானே! நீயும் ஏன் அவனை டைவோர்ஸ் பண்ணும்படி சொல்லக்கூடாது. வெளிநாட்டில் விதவா விவாகம் கிள்ளுக்கீரையாயிற்றே! உன்னுடைய சகோதரி உலகமறியாத பச்சைக் குழந்தை, கல்யாணமாகிய மூன்றும் மாதம் விதவையாயிற்றே! இன்னும் பாவம் அவதிப்பட்டு, சிறுமையுற்றுச் சாகிறதே! முதலில் அவளுக்கு மறுவிவாகத்தைச் செய்வதுதானே! இதை எல்லாம் விட்டுவிட்டுப் பேசுகிறாள் பேச்சு, வெட்கங்கெட்ட பேச்சு.

என்று ஆத்திரத்துடன் இவர் அடுக்கிக்கொண்டு போவதை முடிப்பதற்குள்ளாகவே பார்வதி மெல்ல உள்ளே நழுவிவிட்டாள். விச்வநாதன் திரும்பிப் பார்த்தபோது தனது ப்ரஸங்கத்தைக் கம்பங்களும், பர்னிசர்களுந்தான் கேட்டு ஆனந்தித்ததை அறிந்தார். பார்வதியின்மீது அபாரமான கோபம் பொங்கியதெனினும் 'அவள் மகா துரகங்காரி, கோபிஷ்டி, அவளுடன் பேசிதான் என்ன பலன்?' என்று பேசாமல் வாசல்பக்கம்போய் ஒரு சோபாவில் உட்கார்ந்தார்.

அச்சமயம் "கல்யாணம்! கல்யாணம்" என்று கூறியபடியே ஒரு கிழவர் வந்தார். விச்வநாதன் கடுகடுத்த முகத்துடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து சற்று அஞ்சினர். எனினும் தான்வந்த காரியத்தை விடாமல் நடத்தும்பொருட்டு "ஹி... ஹி... க்ஷேமந்தானே! அம்மா எங்கே?"... என்றார்.

விச்:— அம்மா எங்கேயோ! அப்பா எங்கேயோ! முற்காலத்துப் பெண்களைப்போல் அடுப்பங்கரையில் போய்த் தேடவேண்டுமா என்ன? ரேடியோ செட்டின் கீழேயோ, டென்னிஸ் கோர்ட்டிலேயோ தேடினால் அம்மாளைக் காணலாம். என்ன சமாச்சாரம்? ஏதாவது யாசகமானால் உடனே சொல்லிவிடும், பீடிகைகள் வேண்டாம்...

கிழ:— ஹி... ஹி... ஹி... திருவுள்ளத்திற்கு ஏதோ... கொஞ்சம்... கலக்கம் போலிருக்கிறது... அம்மாவின் இஷ்டப்படியே ஒரு பெண் வந்திருக்கிறது. அதைச் சொல்வதற்குத்தான் வந்தேன்... அதிக தூரமில்லை. அடுத்ததெருவு **அனந்தன்** வீட்டில் வந்திருக்கிறது. அதைத் தெரிவிக்கவே வந்தேன். கிளி என்றால் கிளிதான். பெண்ணுக்கும் ரதிக்கும் வித்யாஸமே காணமுடியாது... கண்ணாடிபோல் மேனி தளதளவென்று மின்னுகிறது. நல்ல உயரம், உயரத்திற்கேற்றபருமன். முகத்தின் சோபையோ! அடாடாடாடா! சொல்லவே முடியாது... என்று வர்ணிப்பதை உள்ளிருந்து கேட்டுக்கொண்டே வந்த பார்வதியம்மாள் வாசலில் வந்து, "வாருங்கள் தாதா!... எந்த ஊர் பெண்?... என்ன வயசு?"... என்று தானே கேட்டாள்.

கிழ:— வாங்கோ! வாங்கோ... வீணைகப் பேசுவதில் உபயோகமில்லை. நீங்கள் வந்து பெண்ணை ஒரு நிமிஷம் பார்த்துவிட்டு வந்தால் போதும். பிறகு விடவே மாட்டீர்கள். அடுத்த தெருவில்தான் இருக்கிறாள். உடனே கிளம்புங்கள்— என்றார்.

பார்வதியம்மாள் தன் கணவனை ஒரு உருட்டல் உருட்டிப்பார்த்தாள். விச்வநாதனின் கோபத்தில் பார்வதியின் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. எங்கோ பார்ப்பவர்போல் பார்த்துக்கொண்டிருந்தார். பார்வதியம்மாளா விடுபவள்? "உம்... எழுந்து உள்ளே வாருங்கள். பிறகு கோட்டையைப் பிடிப்பதற்கு யோசனை செய்யலாம்" என்றாள்.

எதிரே ஒரு கிழம் உட்கார்ந்திருப்பதால் தர்மசங்கடமாகிவிட்டது. முணுமுணுத்தவாறு வந்து 'என்னடீ! கழுத்தறுப்பாயிருக்கிறது. சனியன்! நீ மட்டும் போய் வா. நான் வரமுடியாது. இதுவரையில் எத்தனை வீடுகளுக்குப் போயாயிற்று, எத்தனை பெண்களைப் பார்த்தாயிற்று. அது சொத்தல் இது புழுத்தல். அதுக்கு முறம்போலக் காது; இதற்குக் கீரைவிதைக் கண்ணு. இன்னொன்றுக்கு மோட்டு நெத்தி... சாக்கடைவாயி, சிங்கப்பல்லு, தடிநாக்கு, குட்டைக்காலு... இப்படி எல்லாம் வர்ணித்தது போதாமல் இன்னும் பாக்கி இருக்கிறதா! எனக்கு உன்னால் மானம்போகிறது. நான்வரவே முடியாது. வீண் பிடிவாதமும் சாகசமும் வேண்டாம். நீயே போய்விட்டுவா! இதுவாவது காரியம் முடிவதாயிருந்தால் பார்த்துக்கொள்ளலாம்" என்று ஒரு போடுபோட்டுவிட்டு தடதடவென்று வெளியே சென்றுவிட்டார்.

இந்தம்மாளுடன் படும் அவஸ்தை அவருக்கல்லவா தெரியும். எங்கெங்கு கன்யாப்பெண் இருக்கிறதோ, போய் பார்ப்பதற்கும் தியங்குவதில்லை; பிறகு அப்படி இப்படி என்று வர்ணிப்பதிலும் குறைவில்லை. இந்தம்மாள் தன் மகனுக்கு 18-வது வயதில் பெண் பார்க்க ஆரம்பித்தாள். ஆனால் வருடங்கள் தான் ஓடுகிறதே யன்றி பெண்பார்த்து முடிந்தபாடில்லை.

சில பிள்ளைபெற்றப் புண்யவதிகளைப்போல் சீரும் பணமும் ஆயிரமாயிரமாகக் கேட்கும் பேரத்தில் கல்யாணம் வருஷக்கணக்கில் தள்ளுவதுபோல இந்தம்மாள் கேட்கவில்லை. இந்தம்மாள் மனிதச்ருஷ்டிக் குட்பட்டதை பிறகு பார்க்கலாம்; தெய்வச்ருஷ்டியின் ஆராய்ச்சியை முதவில் கவனிப்போம் என்று தீரமான வைராக்யத்துடன் துடங்கிய காரியம் பூர்த்தியாகும் வழிதான் காணவில்லை. பெண்ணைப் பார்க்கப் போகும்போது, தான் செல்வச் சீமாட்டி என்கிற செறுக்கால் வெத்திலைபாக்கு பழம் முதவியன வாங்காமலும் போகமாட்டாள். அப்படிப் போவது தனக்கு கௌரவம் என்றும் நினைப்பாள். போய்வந்த பிறகோ பெண்ணின் வர்ணனையுடன் நில்லாமல் அதன் குடும்பத்தவர்களையும் சேர்த்து வர்ணிப்பாள். 'இன்று ஒரு கவுளி வெத்திலையும் மற்ற சாமான்களுக்கு நாலணாவும் தண்டம்' என்று பதினாயிரந்தரம் வாய்கூசாது சொல்லவும் தியங்கமாட்டாள். தான் இம்மாதிரி பழிப்பதும் பிசினாறித்தனமாகச் சொல்லுவதும் தனக்கு எவ்வளவு கௌரவக்குறைவு, எத்தனை இளைப்பம் என்பதை அந்தம்மாள் கனவில் கூட நினைப்பதில்லை; நினைக்கும்படி தோன்றுவதும் இல்லை.

இம்மாதிரி தான் தினம் பெண் வேட்டையாடுவதை பிறர்பரிகஸிப்பார்களே என்கிற எண்ணமும் இல்லை, '**சலிக்காமல் உன் கடமையைச் செய்யதியங்காதே. பலாபலனை நான் பார்த்துக்கோள்கிறேன்**'' என்கிற கீதாவாக்யத்தின் தத்துவத்தை ஸ்ரீமதி. பார்வதியம்மாள் இந்த பெண் பார்க்கும்முறையில் வெகு ச்ரத்தையுடன் அனுஷ்டித்து வருகிறாள்போலும்.

தன் வார்த்தையை லக்ஷ்யம் செய்யாமல் தன் கணவன் வெளியே போய் விட்டதால் அந்தம்மாள் காளிகா தேவியாகவே மாறினாள். தாம் தூம் என்று நிர்த்தனம் செய்தாள். பிறகு என்ன தோன்றியதோ என்னவோ! "வராது போனால் போகட்டுமே!...நான் என்ன கையாலாகாத கட்டையா! என்னை என்ன அத்தனை சப்பைமாடு என்று எண்ணினாரா!... அடீ **கோமதீ**! வெத்திலைப் பாக்கு தட்டில் எடுத்துவை.'' என்று சற்று அதிகாரத்துடன் சமையல்காரம்மாளுக்கு ஆக்கினை இட்டாள்.

அடுத்த நிமிடமே தாம்பூலத்தட்டு ஆஜராகியது. "**கணவன் அடித்தாலும் அடித்தான்; கண் புளிச்சைபோயிற்று**'' என்கிற பழமொழிப்படி கணவன் கோவித்தாலும் கோவித்தார். சமையல்கார கோமதியம்மாளுக்குச் சமத்வமும் யோகமும் உதயமாகிவிட்டன. "கோமதீ! முகங்கழுவிக் குங்குமம் இட்டுக்கொண்டு பொங்கலுக்கு கொடுத்த புதுப்புடவையைக் கட்டிக்கொண்டுவா, அடுப்பில்என்ன வைத்திருந்தாலும் எடுத்து கீழே மூடிவைத்துவிடு. உடனபேறப்படு''என்றாள்.

கோமதி சமையலுக்கு வந்து இத்தனை வருஷத்தில் ஒருநாள்கூட தன் எஜமானியம்மாள் இம்மாதிரி ஒரு வார்த்தை சொல்லியது கிடையாது. ஆகையால் இதைக் கேட்டதும் கோமதி தன் காதுகளையே நம்பவில்லை. தனக்கு இந்தமாதிரி ஒரு நல் வார்த்தை கேட்கும் அதிர்ஷ்டத்தில் உயிரே போய்விட்டாலும் போய் விடுமோ! என்றுகூட எண்ணினாள்.

அடுப்பில் பால் காய்ந்துகொண்டிருந்ததை இறக்கி மூடிவிட்டு வென்னீர் ஜலத்தைப் போட்டுவிட்டு சுறுசுறுப்பாக அலங்காரத்தை முடித்துக்கொண்டு 5 நிமிஷத்தில் ஆஜரானாள். முக்யமான பெரிய உத்ஸவகாலத்தில் ஸ்வாமி தரிசனத்திற்குக் கோயிலுக்குப் போகவேண்டுமென்று கோமதி கேட்டால்கூட "நான் போகும் சமயத்தில் நீ வரவேண்டாம், பிறகு போ!'' என்று உத்திரவிடும் மகராஜி, பெண் பார்ப்பதற்கே தன்னுடன்கூட அழைத்துச் செல்வதென்றால் வியப்புண்டாகாமலிருக்கமுடியுமா!

"கோமதீ! தட்டை எடுத்துக்கொள்ளு. அடுத்த தெருவுதானம். நடந்தேபோய் வரலாம். முரளி காரை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அறைகளைப் பூட்டிக் கொண்டாயா...!சரி பெரியவரே! மூன்று பேர்களாகப் போகக்கூடாது. அதனால்

நீங்கள் முன்னால் போய் அந்த வீட்டு வாசலில் நில்லுங்கள். நாங்கள் பின்னால் வருகிறோம்'' என்றாள்.

கிழவர் சந்தோஷத்துடன், "ஆகா! இதோ போகிறேன். குழந்தையைப் பார்த்தால் நீங்கள் விடப்போவதே இல்லை. உங்களுடைய கௌரவத்திற்கு நீங்கள் ஒரு ஸில்கு ரவிக்கைத் துண்டு கொண்டுவந்தால்தான் நன்றாக இருக்கும். நீங்களே எடுத்து வைத்திருப்பீர்கள்...நான்சொல்லவேண்டுமா!'' என்று கூறிய வாறு பதிலுக்கு எதிர்பார்க்காது போய்விட்டார்.

பார்வதியம்மாள் சற்று தயங்கினாள், "சரி...கோமதி! என் துணி பீரோவைத் திறந்து நல்லதா ஒரு ரவிக்கைத் துண்டு கொண்டு வா!'' என்றாள், தினம் பீரோ வைத் திறந்திருக்கும் சமயத்தில்கூட கோமதி அங்கு நிற்கக்கூடாது என்று நினைத்து நடந்துகொள்ளும் எஜமானியம்மாள் இன்று பீரோவின் சாவியைக் கொடுத்துத் திறக்கும்படியே ஆர்டர் கொடுத்துவிட்டாள் என்றால் இதை நம்ப முடியுமா! கணவன்மீது வந்த கோபத்தின் வேகம் இத்தகைய மாறுட்டத்தைக் கொடுத்துவிட்டது என்பதைத் தவிர வேறு என்ன கூறமுடியும்? கோமதி ரவிக் கைத் துண்டைக் கொண்டுவந்தாள். இருவருமாகத் தட்டு சகிதம் கிளம்பினார்கள். பார்வதியம்மாளின் மனத்தில் ஒருபுறம் கோபமும் ஒருபுறம் சந்தோஷமும் சேர்ந்து தண்டவமாடுகிறது. தான் இந்ததரமாவது ஜெயம் பெற்றுத் தன் கணவன் முன்பு தானே காரியத்தைச் சாதித்துப் பெருமையடைய வேண்டு மென்கிற பேராவல் அவள் உள்ளத்தில் அலைபோல் மோதியது.

3

முரளியும் நாகராஜனும் காரில் ஏறிய பிறகு நாகராஜன் மெல்ல சிரித்த படியே, "எங்கே அழைத்துப்போகிறாய்? காரை நிதானமாக ஓட்டப்பா! விஷ யத்தைத்தான் சொல்லிவிடேன்'' என்றான்.

மு:—டேய் அவசரக்குடுக்கை! பேசாமல் வாயேன்; கார் நிற்கும்இடத்தைப் பார்த்தால் தானாகத் தெரிகிறது. ஏன் தொந்தரவு செய்கிறாய்? இதைமட்டும் வீட்டில் அம்மா அப்பாவிடம் சொல்லாதே—என்றான். சில நிமிஷங்களில் ரேடியோ கட்டடத்திற்கு எதிர்ப்புறமுள்ள மைதானத்தில் கார் நின்றது.

சுபாவத்திலேயே ஹாஸ்யமும் குறும்பும் நிறைந்த நாகராஜன், "டேய் திருட்டுப் பயலே! இப்போது நீ சொல்லாமலேயே விஷயம் விளங்கிவிட்டது. சற்று முன்பு நீ அத்புதம், ஆனந்தம் என்று அகராதி எழுத்துக்கள் ஒப்பித் தாயே; அத்தகைய ஆனந்தத்தை ஊட்டிய வனிதாரத்தினத்தைப் பார்க்கத்தானே வந்திருக்கிறாய். சொல்லிவிடு'' என்றான்.

மு:—இனிமேல் என்னடா ஒளிவும் மறைவும்? கட்டாயம் அவளைப் பார்க் கத்தான் வந்திருக்கிறேன். செவிக்கும் உள்ளத்திற்கும் இசைவிருந்து கொடுத் ததுபோல் நேத்திரத்திற்கும் கொடுக்கிறாளா என்று பார்க்கவந்தேன். இனிமேல் தினம் இந்த உத்யோகத்தைவிடாது செய்தால் ஒரு பக்ஷியைக் கட்டாயம் நான் நினைக்கிறபடியே பிடித்துவிடலாம் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

நாக:—சரிதான்...சரியான உத்யோகந்தான். சில மைனர்கள், பெண்கள் படிக்கும் காலேஜ் வாசலில் கொட்டாவி விட்டுக்கொண்டு நிற்பதை நான் பார்த் திருக்கிறேன். நீ ரேடியோ வாசலுக்குவந்து தவம் செய்யப்போகிறாயா! பேஷ்! சபாஷ்! எத்தனையோ விதமான ஆராய்ச்சிகள் (ரிஸர்ச்) இருப்பதுபோல் இதொருவிதமான ஆராய்ச்சியா...ஆமாம்...நான் ஏதோ செய்யவேண்டும் என்று பீடிகை போட்டாயே! எனக்கென்ன உத்யோகம் தரப்போகிறாய்?

மு:—என்ன உத்யோகமா! நான் காருடன் இந்த கோடியிலேயே இருப் பேன். நீ அந்த கட்டடத்தருகில் சென்று அவள் யாரு என்ன! கச்சேரி செய்கிற வளா! குடும்பத்துப் பெண்ணா முதலிய விவரங்கள் இல்லையா! அதை விசாரிக்க வேண்டும். சகலமும் பிடித்துவிட்டால் பிறகு பெரியவர்களிடம் சொல்லி முடித்து விடலாம். இதுதான் உத்யோகம். என்ன சொல்லுகிறாய்?...

நா:—அப்பா! ரொம்ப சந்தோஷம்...அர்ஜுன சன்யாசிக்காக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா செய்ததைவிட இது ஒரு படிக் கட்டு அதிகமாகிவிட்டது. சரிதான்! சரிதான். பஸ்டுக்ளாஸ் உத்யோகமப்பா! உத்யோகம்...'நீ யாரடா! தடியா!' என்று எவனாவது, ஏன் அந்தப் பெண்ணின் கணவன், கன்னத்தில் அறைந்தால் என்ன செய்வது?

மு:—போடா முட்டாள்! ஸ்ரீமதி...என்கிற பெயர் வந்தவர்களைப் பற்றி கவலையேதடா! குமாரி...மிஸ்...என்று வரும் பேர்வழிகளைமட்டுந்தானே பார்க்க வேண்டும். அதற்குத் தகுக்காகப் பேச உனக்குத் தெரியாதா! அதுகூடவா கையாலாகாது? அதோ பார்; கார் வருகிறது.

நா:—அப்பா! சரியான வேலைதான். ஏதோ இந்த முயற்சியாவது பலிக் கட்டும் பார்க்கலாம்...இங்கேயே இரு; போய்வருகிறேன்—என்று கூறியவாறு கட்டடத்திற்கருகில் சென்றான்.

கார் வந்து நின்றதும் ஒரு குடுகுடுப்பை கிழம் முதலில் இறங்கியது. பிறகு ஒருதடியன் பெரிய வீணையொன்றை எடுத்துக்கொண்டு இறங்கினான். இன்னொருவன் கிழவரை மெல்லப் பிடித்து அழைத்து உள்ளே சென்றான். நாக ராஜனுக்கு ஒருபுறம் ஏமாற்றமாயும் ஒருபுறம் ஆச்சரியமாயுமிருந்தது.

'யாரோ சுகுமாரி இறங்கப்போகிறாள் என்று பார்த்தால் குடுகுடுக் கிழம் இறங்குகிறதே! இந்த கிழம் இங்கு எதற்கு வருகிறது?' என்று இவன் வியப்பதற்குள் அங்கு இருந்த ஒருவன், "அடாடா! வீணைவித்வான் வந்துவிட்டார்! வயது ஆக ஆக அவர் சரீரம் கிழடுதட்டியிருக்கிறதேயன்றி சங்கீதம் அன்றைவிட இன்று இன்னும் பழுத்தபழம்போல் இனிக்கிறது. இந்த மகாநுபாவனின் கைத்திறமை யைப்போல் யாருக்குவரும்? என்று தன்னுடன் இருந்தவனோடு கூறியதைக் கேட்ட நாகராஜனின் வியப்பு பின்னும் அதிகரித்தது. அடாடா! இந்த தொண்டு கிழவரின் விரல்களா அமுதமழையை-இன்பநாதத்தை-பொழியப் போகின்றன" என்று தனக்குள் எண்ணியவாறு கிழவரை நோக்கிக் கையைக் கூப்பினான்.

கிழவரும் இவன் பெரிய ரஸிகன் என்று எண்ணி பதில் மரியாதைக் கும்பிடு போட்டார். நாகராஜனுக்குண்டாகிய சந்தோஷம் கூறத் திறமில்லை. பெரிய வித்வானின் மதிப்பு தனக்குண்டாகியதை எண்ணி பூரித்த வேகத்தில் முரளியனுப்பிய காரியத்தைக்கூட மறந்துவிட்டான். தனக்கும் சங்கீதம் பாடத் தெரியும் என்பதைக் கிழவர் அறிந்துகொள்ளவேண்டுமென்று பெரிய ஆசை உண்டாகியதால் தன் போக்காக **நாட்டைக்குறஞ்சி** ராகத்தை இழுத்தான். கிழவர் இதைக் கேட்டு ஏதாவது சபாஷ் போடுவார் என்பது அவனுடைய பேரவா. கிழவர் ஆயாசத்தினால் ஒரு ஆசனத்திலமர்ந்தார். உண்மையில் நாக ராஜன் பாடுவதைக் கிழவர் கவனித்துத் தலையும் ஆட்டினார். அதைக் கண்ட நாக ராஜனின் தலையில் சரஸ்வதி தேவியே ஒரு க்ரீடத்தைக் கொண்டு வைத்தது போன்ற பிரம்மானந்தம் உண்டாகி உடம்பே பூரித்தது.

ஸ்வரம் பின்னும் சற்று உச்சத்தையடைந்தது. கிழவர் சற்று நிதானித்த குரலில் "தம்பி! இங்கே வா!" என்றார். நாகராஜன் அளப்பரிய ஆனந்தத்துடன் எழுந்து அருகில் வந்தான். நாட்டைக்குறஞ்சி ராகத்தை வெகு சுகமாக அனுபவித்தேன். உன்னைப் பார்த்தால் உயர்தரப் படிப்பு பெற்று உத்யோகத்திலும் இருப்பதாகத் தெரிகிறது. அத்தனைக்கும் மத்தியில் சங்கீதத்தையும் விடாது பழகுகிறதைப் பார்த்தால் மிக்க சந்தோஷமாயிருக்கிறது. எனக்கு ஒரு காரியம் செய்வாயா!" என்று பீடிகை போட்டார்,

நாகராஜனின் உச்சியே குளிர்ந்துவிட்டது. இன்று தனக்கு ஏதோ யோக காலம் பிறந்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்தவனாய் கிழவரருகில் அஞ்சலிபந்தனாக நின்று "என்னால் கூடுமான காரியத்தைச் செய்யத் தயாராக இருக்கிறேன். தங்களைப் போன்ற பெரியவர்களுக்கு நான் ஊழியம் செய்ய பாக்யம் செய்திருக்கிறேன். என்ன ஆகவேண்டுமோ தெரிவியுங்கள்" என்றான்.

கிழவ:—ஒன்றும் பிரமாதமான காரியமில்லே. எனக்கு எப்போதும் இரட்டைத்தம்பூரா ச்ருதிவேண்டும். ஒரு தம்பூராக்காரர் வந்திருக்கிறுர்; இன்னெருவர் வரவில்லே. சற்று நீ அதை ச்ருதி போடவேண்டும். அவ்வளவுதான். உள்ளே வா! போவோம். இந்த ரேடியோவில் உன்ஃனயும் பாட வைத்துவிடுகிறேன்'' என்ருர்.

இதற்குமேல் நாகராஜனுக்கு உடம்பே தெரியவில்லே. உடனே ஒரு துள்ளு துள்ளியவாறு கிழவரோடு உள்ளேபோஞன். அவனுக்குத் தம்பூரா ச்ருதிபோட்டு வழக்கமில்லேயெனினும் வீட்டில் தன் சகோதரி பாடிய காலத்தில் தான் ச்ருதி போட்டிருப்பது அவனுக்கு நிஃனவிற்கு வந்தது. ஏதோ தடவிக்கொண்டாவது ரேடியோ ஸ்டேஷனுக்குள் உட்கார்ந்திருக்கலாம்'' என்று எண்ணிஞன்.

தம்பூராவைத் தூக்கி வைத்துக்கொண்டு கிழவரே ச்ருதி சேர்த்து நாகராஜனிடம் கொடுத்தார். நாகராஜன் தம்பூராவைப் பணிக்கையாக வைத்துக்கொண்டு ஸாரிணி, அனுஸாரிணி கணீர் என்று த்வனிக்கும்படி ஆனந்தமாக மீட்டவாரம்பித்தான். இரண்டு தம்பூராக்கள் சேர்ந்து நாதத்தை எழுப்புவதால் இதில் சற்று குறைவிருந்தாலும் தெரியாது போயிற்று.

கிழவர் வீணையை எடுத்து பிரம்மானந்தமாக மீட்டி நாகராஜன் பாடிய அதே நாட்டைக்குறஞ்சி ராகத்தை வெகு இனிமையாகக் கம்பிகளில் தாண்டவமாடச் செய்தார். நாகராஜனுக்கு ஏற்கெனவே இருந்த ஆனந்தம் பின்னும் ஆயிரம்மடங்காகப் பொங்கி தன்ஃனயே மறந்துவிட்டானென்ருல் மிகையாகாது.

4

பார்வதியம்மாள் கணவனின்மீது வந்த கோபத்திஞல் நடைகூட விருவிரென்று கிளம்பியது. கோமதியுடன் சமமாக வீதியில் நடப்பது இன்றே முதல் தரமாகையால் வீதியில் உள்ளவர்கள் இதையோர் வேடிக்கையாகப் பார்க்கவும் ஆரம்பித்தார்கள். பார்வதியம்மாளுக்கு ''ரவிக்கையைக் கொடுப்பதா! வேண்டாமா!...முதலில் பெண்ஃணப் பார்ப்போம்; பிடித்திருந்தால் கொடுப்போம்; இல்லாவிட்டால் கையிலேயே எடுத்துக்கொண்டு வந்துவிடலாம்'' என்று எண்ணியபடியே, ''கோமதி! ரவிக்கையைத் தட்டிலிருந்து எடுத்து தனியாக வைத்துக் கொள்ளு; பெண்ஃணப் பிடித்தால் தட்டில் வைக்கலாம்'' என்ருள்.

கோமதிக்கு உள்ளுக்குள் சிரிப்பு வந்தது. 'இந்தம்மாளின் பன்னுடைத்தனத்திற்கு ஏற்றுப்போலத்தான் யாவும் நடக்கிறது' என்று நிஃனத்தவாறு ரவிக்கையை மடியில் மறைத்துக்கொண்டாள். தரகுக்காரக் கிழவர் வீதியிலேயே காத்திருந்து ''வரணும்! வரணும், மகாலக்ஷ்மிபோல் வருகிறீர்கள். மகாலக்ஷ்மி போல் பெண்ஃணப் பார்க்கப்போகிறீர்கள். மகாலக்ஷ்மியைப்போல் மங்களகரமாகக் காரியத்தை முடித்துவிடுங்கள்'' என்று தடபுடலாகப் பேசி உபசரித்து, ''அம்மா! சம்மந்தியம்மாள் வருகிருர்கள்; வந்து அழைத்துப்போங்கள்'' என்று பெண்ணின் தாயாரைக் கூப்பிட்டார். சாக்ஷாத் ஸ்ரீமகாலக்ஷ்மியின் அம்சமோ ! என்று ப்ரமிக்கும்படி ஒரு பெண்பிள்ஃள வந்து சிரித்தமுகத்துடன் 'வாருங்கள்! வாருங்கள்!'என்று அழைத்த ஒரு அழகே போதும். அப்படி அன்பும் பணிவும் ததும்ப அழைத்தாள்.

இந்தம்மாஃளப் பார்த்தபோதே பார்வதியம்மாளின் மனங் குளிர்ந்துவிட்டது. அவளும் பதில் மரியாதை செய்து சிரித்தபடியே உள்ளேவந்தாள். கிழவர் இருவரையும் பார்த்து ப்ரமாதமாக நகைத்துக்கொண்டு, ''அடாடாடா! சம்மந்தியம்மாளின் ஜோடிகஃளப் பார்க்க த்ருஷ்டிவந்துவிடும்போலிருக்கிறது. சாக்ஷாத் பார்வதியும் லக்ஷ்மியும் நிற்பதுபோலவே தோன்றுகிறது. பெண்ணின் தாயாரைவிடப் பெண் இன்னும் ரதிதேவியாகவிருக்கிருள். அதேபோல் இந்தம்மாஃளவிட மாப்பிள்ஃள மன்மதஞகவே இருக்கிருர். என்ன ஜோடி. என்ன ஜோடி. அழகு வெள்ளம்புரண்டு ஓரிடத்தில் உருவாகியதுபோலல்லவா தோன்றுகிறது'' என்ருர்.

பார்வதியம்மாளின் சந்தோஷம், ஒவ்வொரு ஸ்வரமாக ஸ்தாயிகள் ஏறிக்கொண்டேவந்தது. உள்ளே வெகு அலங்காரமாக சோபாக்களும் ரத்தினக் கம்பளங்களும் விரித்திருந்தன. பார்வதியை ஒரு சோபாவில் உட்காரச் செய்துப்

பின் தானும் அமர்ந்தாள். "உங்கள் சம்மந்தம் கிடைக்க வேண்டுமென்று நெடுநாட்களாக ஆசை; பகவான் அதைப் பூர்த்தி செய்யவேண்டும்" என்று மெல்ல பெண்ணின் தாயார் ஆரம்பித்தாள்.

அழகிற்கே அடிமையாகிய பார்வதியம்மாள் வெகு சந்தோஷத்துடன் "நானும் அப்படித்தான் நினைக்கிறேன். கடவுள் நிறைவேற்றிவைக்கவேண்டும். உங்களுக்கு இவள்தான் மூத்தப் பெண்ணு! எங்கே குழந்தையைக் கூப்பிடுங்கள்" என்றாள்.

உடனே தாயார் ஆனந்தத்துடன் "அம்மணீ! வாம்மா! வந்து நமஸ்காரம் செய்யம்மா! இவருக்கே நீ மருமகளாக வேண்டுமென்று ஸ்வாமியை வேண்டிக் கொண்டு வா!" என்றாள். பூங்கொடியோ! பொன்னந்தழையோ! என்று ஐயுறும் படியான அழகு தேவதைபோன்ற மணப்பெண் புன்னகை பூத்தவதனத்துடன் அன்ன நடையுடன் வருவதைப் பார்க்கும்போதே பார்வதியம்மாளின் இதயத்தில் ஆனந்தப் பெருக்கு வெள்ளமாகப் பொங்கிவந்தது.

"ரதி என்றால் ரதிதான். வேறு உபமானமே வேண்டாம்" என்று பார்வதிக்குத் தோன்றிவிட்டது. கோமதிக்குக் கண் ஜாடை காட்டி ரவிக்கையை கொடுக்கும்படிக் கூறினாள். ரவிக்கை வைத்த தட்டை பெண் நமஸ்காரம் செய்த உடனே "தீர்க்கஸுமங்கலீபவ"...என்று வாழ்த்திப் பின் "அம்மணீ! எனக்கே நீ மாட்டுப்பெண்ணாக வரவேண்டும்" என்று இதய பூர்வமான அன்புடன் கூறினாள்.

பெண்ணும் நமஸ்காரம் செய்து தாம்பூலத்தைப் பெற்றுக்கொண்டு நின்றாள். பார்வதி பெண்ணை இழுத்துத் தன் பக்கதில் உட்காரவைத்துக்கொண்டு தடவிக்கொடுத்தாள். **கம்புக்குத் களைவெட்டித் தம்பிக்குப் பெண்பார்க்கும் குணம்** பார்வதியம்மாளிடம் ஏராளமாக உண்டு. அதேபோல் பெண்ணை ஆசையுடன் தடவியவாறு, பெண்ணின் தலைமயிர் சுயம்மயிரா! அல்லது சவுரியா? நகைகள் எல்லாம் நல்லதா! மட்டமா? என்னென்ன நகைகள் போட்டுக்கொண்டிருக்கிறாள்? பல்லு வெளேலென்றும் வரிசையாயும் இருக்கிறதா? கழுத்துப் பின்பட்டை அழுக்கில்லாது பளபளவென்று இருக்கிறதா? பூனைக்கண்ணில்லாதிருக்கிறதா? பிறவியிலேயே முகம் பளபளப்பாய் சிகப்பாயிருக்கிறதா! அன்றி பவுடர், ஸ்னோ முதலிய உதவிகளால் இருக்கிறதா? என்று பேச்சுக் கொடுத்துக்கொண்டே ஆராய்ச்சி செய்வதில் மகா கெட்டிக்காரி; சாமர்த்தியசாலி.

இதே வேலையை தன் மகனுடைய 18 வயது முதல் செய்துவருவதால் நல்ல தேர்ச்சியும் பெற்றுவிட்டாள். முகத்தைத் தடவி பெண்ணை முத்த மிடுவதுபோல் கன்னத்தைத் தடவி பெண்ணைப் பார்த்து உண்மை நிறம், பவுடர் நிறம், என்பதை அறிந்துகொள்வாள்.

தனது சாமர்த்தியங்களை உபயோகித்து சகலத்தையும் அறிந்துகொண்ட பிறகு உண்மையில் பார்வதியம்மாளின் மனது பெண்ணிடம் லயித்துவிட்டது. 'இன்னும் சற்று உசத்தியான ரவிக்கை வாங்கிவராமல் போனேமே' என்றுகூட எண்ணினாள். தன் கணவன் தன்னுடன் வராது செய்த அனியாயத்திற்கு இந்த வரனை முடித்துக்கொண்டுபோய், தான் ஜெயித்த பெருமையைக் கூறி அவரை அழைத்துவரவேணும் என்றும் நினைத்தாள்.

பெண்ணுக்குப் பாடத் தெரியுமா? என்று கேட்டாள். உடனே பெண் தம்பூர் ச்ருதி வைத்துக்கொண்டு வெகு ஆனந்தமாகப் பாடினாள். பார்வதியம்மாளின் சகல மனோபீஷ்டமும் நிறைவேறிவிட்டதுகண்டு, உள்ளம் அபாரமாகப் பூரித்தது. தனதுசந்தோஷத்தை தெரிவிக்கும் தோற்றத்தோடு, 'போதும்மா; த்ருஷ்டியாய் போய்விடும். சரஸ்வதியின் அவதாரம்போல் இருக்கிறது உன் சங்கீதம். இம்மாதிரி எல்லாம் ஒன்றாக அமைவதற்குத்தான் நான் காத்துக்கொண்டிருந்தேன். மேலே ஆகவேண்டிய காரியத்தைச் செய்யலாம். இம்மாதமே முகூர்த்தமும் வைத்துவிடலாம். என்று படபடத்துத் தானே கூறிவிட்டாள்.

பெண்ணின் தாயாருக்கும் சந்தோஷம் உச்சத்தை எட்டியது. "உங்கள் குமாரனை நாங்கள் நேற்றுக்கூட பார்த்தோம். நாங்கள் இனி பார்க்கவேண்டிய

அவச்யமில்லை. பெண்ணும் பிள்ளையும் பார்த்து சம்மதித்துவிட்டால் அந்த நிமிஷமே நிச்சயதார்த்தம் செய்துவிடலாம். மாப்பிள்ளைக்குக் கூடப்பிறந்தவர்கள் எத்தனைபேர்கள்?'' என்றாள்,

பார்:—அவனுக்கு அவனேதான் கூடப்பிறந்தவன். அவனுடைய மனைவிதான் எனக்குப் பெண்ணு. எல்லாம் அவன்தான். ஸீமந்தப் புத்திரனும் அவன்; கடைசீ குட்டியும் அவன்தான். உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?

தாயார்:—மூத்தபெண் இவள்தான். இவளுக்குப் பிறகு இரண்டுதம்பிகள் இருக்கிறார்கள். சரி. மனதிற்கு மிகவும் பிடித்துவிட்டது. நீங்கள் யார் யாரிடம் பேசி முடிவுசெய்யவேணுமோ செய்யலாம். சீர்வகைகளைப்பார்க்கவேண்டுமாயின் இப்போதே காட்டுகிறேன்—என்றாள்.

கரும்பு என்றாலே வாயில் நீர் சுரப்பதுபோல் பிள்ளைவீட்டாரில் சிலர் சீருக்காகவே தாம் பிறந்ததாகக் காத்துக்கிடக்கும் கோஷ்டியில் சேர்ந்த பார்வதியம்மாளுக்கு ஆசை உதயமாகாதிருக்குமா? ஆனால் தான் அப்படி ஆசைப்பேயாய் தவிப்பவள் அல்லபோல் வேஷம் போட்டுப் பேசுவதில் வெகு கெட்டிக்காரிதான். சிலர் சாப்பிடும்போது தனக்கு வேண்டிய பதார்த்தங்களைக் கேட்டுச் சாப்பிட வெட்கம். தானகப் பரிமாற வந்தாலும் ஒரு கையால் 'வேண்டாம். வேண்டாம்' என்று ஸ்ரீமத் கம்பீரமாகத் தடுப்பது. ஒரு கையால் போட்டதை காலிசெய்வதோடு பாத்திரத்தில் இன்னும் இருக்கிறதா? என்று கடைக்கண்ணால் சுழட்டிப்பார்ப்பது.

அதுபோல் பார்வதியம்மாள், 'நமக்குள் மன ஒற்றுமை முக்யமேயன்றி சீர்வகைதானா ப்ரமாதம்? எங்களுக்கிருக்கும் சொத்தை உங்கள் பெண் பத்து பேர்களுக்குக் கொடுத்து ஆளலாம்; அதைப்பற்றி நான் ஆசைப்படவில்லை. நீங்கள் பச்சைப்பந்தலில் செய்தால் உங்கள் பெண்ணுக்கு கௌரவமாயிருக்கிறது. உங்கள் பெண் சுகமாக ஆளப்போகிறாள். எனக்கென்ன அதனால் லாபம்?' என்று ஒரு அசட்டுவார்த்தையைப் போட்டபடியே, 'ஏதோ! எங்க வீட்டிலிருக்கும் பாத்திரங்களே மெருகு குலையவில்லை. பெட்டியில் தூங்குகின்றன. இதெல்லாம் உலகத்திற்கு ஒப்பேயன்றி நமக்கென்ன அதிசயம்...என்னென்ன செய்திருக்கிறீர்கள்! பழங்கால மாதிரியா! புதியகால மாதிரியா!' என்று முடித்தாள்.

இதற்குள் பெண்ணின் தாயார் சீர்வகைகள் உள்ள விடுதிக்கு அழைத்துச் சென்று பீரோவைத்திறந்து காட்டினாள். பார்வதியம்மாளின் கண்கள் சந்தோஷத்தால் மலர்ந்து அபாரமாக ப்ரகாசித்தன. உருப்படிகள் எத்தனை என்று அதே கண்கள் எண்ணவும் தொடங்கின. எத்தனை புதியமாதிரிகள், எவ்வளவு கனமிருக்கும் என்பதையும்ஒன்று இரண்டு பாத்திரங்களைத் தூக்கியும்பார்த்தாள்.

சிலருடைய அசட்டுச் சமத்துக்கள் பலவிதம் இருக்கின்றன. ஒரு அற்புதமான வஸ்துவையோ! சீர்வகைகளையோ பார்த்தால் அதைப் பெருமைபடுத்தி உள்ளது உள்ளபடி கூற மனம்வருவதில்லை. ''என் தங்கை பெண்ணுக்குக்கூட இதைப்போல் இரட்டைப்பங்கு சீர் எடுத்தோம், எங்க வீட்டில் குடி இருப்பவள் நாட்டுப் பெண்ணுக்கு இதைப்போல் மூன்றுமடங்கு சீர் வந்தது. எங்க அத்தைப் பெண்ணுக்கு இதேபோல் விதவிதமாகச் செய்துவைத்திருக்கிறார்கள்'' என்றுஒரு வரட்டு ஜம்பம் பேசுவது. இதனால் அவர்கள் அடையும் லாபம் ஒன்றுமில்லை. சீர்கள் காட்டியவர்களுக்கும் சப்பென்றுபோய்விடுகிறது. அதேபோல் பார்வதியம்மாளும் கிள்ளுக்கீரை வார்த்தைகளை அளந்தவாறு பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

இந்த சீருக்குச் சரிசமதையாகத்தான் நாட்டுப்பெண்ணுக்கு உயர்ந்த நகைகளும் புடவைகளும், விளையாடல் சாமான்களும் வாங்கவேண்டுமென்கிற எண்ணமே உண்டாவதில்லை. அதே கோஷ்டியிலிருக்கும் பார்வதியம்மாள் தான் செய்யப்போவதைப்பற்றி வாயே திறக்கவில்லை. நான் செய்தாலும் செய்யாவிட்டாலும் சகலமும் அவளுடையதேதான் என்கிற பல்லவியை சிலர் பாடிவதுபோல் பார்வதியம்மாளும் பாடத் தயாராகவிருந்தாள்.

பெண் வீட்டார் அல்பத்தனமாக அவளை ஒன்றுமே கேட்கவில்லை. பார்வதியம்மாள் வெத்திலைப்பாக்கு வாங்கிக் கொண்டு, பெண்ணைக் கட்டிமுத்தமிட்டுவிட்டு விடைபெற்றுக் கொண்டாள். இரண்டடி நகர்ந்ததும் எதையோ நினைத்தவளாய் திரும்பிவந்து "சம்மந்தியம்மா! மனப்பொருத்தத்திற்குமுன் வேறு ஒரு பொருத்தமும் பார்க்கவேண்டாம். ஆத லால் இதுவே நிச்சயதார்த்தமாகவிருக்கட்டும். இனி இதில் மாறுதலே இல்லை... அம்மணீ! இந்தம்மா! என்று அழைத்துத் தன் கைவிரலிலிருந்த வைரமோதிரத் தைக் கழட்டி பெண்ணின் விரலில் பூட்டி அக்கரத்தை முத்தமிட்டுப் பின் சென் ருள். பார்வதியம்மாளின் மனத்தில் ஆனந்த அலைமோதியது. என்றும் உணராத இன்பத்தை அவள் உள்ளம் உணர்ந்தது.

5

நாகராஜனை அனுப்பிவிட்டு முரளீதரன் காருடன் உட்கார்ந்திருப்பவன் வழி பார்த்துப் பார்த்து கண்ணே பூத்துவிட்டது. மடப்பயல் இன்னும் வரக்காண வில்லையே. எங்கே துலைந்துபோய்விட்டான். எத்தனை நேரம் இங்கு மொட்டு மொட்டென்று காத்திருப்பது இங்கொரு தடியன் இருக்கிறன் என்பதைக்கூட மறந்து யாருடன் வாயாடுகிறனே தெரியவில்லையே! அப்பாவுக்குக் கார் சீக்கிரம் போகவேண்டுமே! என்ன செய்வது என்று யோசித்தவாறு பல்லைக்கடிக்கிறன். அந்தபக்கமே பார்க்கிறன். நிமிடத்திற்கு நிமிடம் கோபம் அதிகரிக்கின்றது.

பொழுதும் ஏறுகிறது. வீணை நாதமும் மெல்லிய இசையும் ஆனந்தமாகக் கேட்பதை முரளியின் மனோ நிலையில் அதை அனுபவிக்க அவனல் முடியவில்லை. காரிலிருந்து இறங்கி அங்கும் இங்கும் சற்று உலாவிப் பார்த்தான். ஒரு மரத் தடியில் நின்ருன். கட்டடத்தருகில்போய் பார்த்தான். ஆளைக் காணவில்லை. பின்னும் கோபம் அதிகரித்தது. வீட்டிற்கே போய்விடலாம் என்று முடிவுகட்டி உடனே காரை விட்டுக்கொண்டு விற்றென்று வீட்டிற்கு வந்து சேர்ந்தான். முகத்தில் எள்ளுங்கொள்ளும் வெடிக்கிறது. பேசாமல் தன்னறைக்குப்போய் நாகராஜனை சபித்துக்கொண்டே சோபாவில் சாய்ந்துக்கிடந்தான். தன் தாயார் பெண் பார்க்கப்போயிருப்பது அவனுக்குத் தெரியாதாகையால் தாயார் எங்கு சென்றிருக்கிறளோ!" என்று எண்ணினன்.

நாகராஜனை அப்படியே விழுங்கிவிடலாமா! என்றுகூட ஆத்திரப்பட்டான். மணி தன்னுடைய கடமையை வழுவாது ஓடிக்கொண்டே இருக்கிறதைப் பார்க்க எரிச்சல் பின்னும் அதிகரித்தது. சுமார் 7-30 மணிக்கு நாகராஜன் இடி இடித்தது போன்ற குரலில் "நல்ல மனிதனடா நீ! உள்ளே ஒருவன் போய் வருவதற்குள் சொல்லாமல் வந்துவிட்டால் நான் எப்படி வருவது என்று நினைத்தாய். ஏதடா! நமக்காகத்தானே போயிருக்கிறன். இதற்குள் நாம் போவதா என்று யோசித் தாயா! கழுதைபோல் நடந்து ஓடிவந்தேன். இங்கு என்னடா அவசரம் மிஞ்சிப் போகிறது ?" என்று கர்ஜித்தான்.

முரளீதரனுக்குள்ள கோபத்தில் நாகராஜனின் முகத்தைப் பார்க்காமல் திருப்பிக்கொண்டான். பிறகு "சீச்சீ! நீ ஒரு மனுஷ்யனு! உன்னை நான் பெரிய காரியவாதி என்று எண்ணி அழைத்துப்போனதே முட்டாள்தனம். போனேம்; வந்தோம், என்று காரியத்தைப் பார்க்காமல் யாரிடமடா வாயாடிக்கொண்டிருந் தாய்! வாயாட்டத்திலுள்ள ருசி காரியத்தில் காணவில்லையே! இத்தனை நேரம் என்ன செய்தாய் ? சொல்லியழு" என்று விடுவிடுப்பாக பேசினன்.

நாக:—ஆ... அப்படி வழிக்கு வாடா ராஜா! கல்யாணப் பேச்சு எடுக்கும் போது, அழு. என்று அவச்சொல்லை யளக்கிருயே! அத்தனை கோபமா!... என்ன செய்தேன் என்ரு கேட்கிருய்! கல்யாணமென்ருல் சாமானியமாக ஆகிவிடக்கூடி யதா! அதோடு உன் கல்யாணம் என்ன உலகத்தவர்களைப் போன்ற கல்யாணமா! அடேயப்பா! ரேடியோவுக்குச்சென்று பெண் நிச்சயிப்பதென்ற தீர்மானம் நிச்சய மாயிற்று, எத்தனை நாள்,மாதம்,ரேடியோவிற்குப் போகவேண்டுமோ!எத்தனைபேர் களைப்பார்க்கவேண்டுமோ! என்கிற முன்யோசனையினுல் ஒரு பாடகரின் தயவை

முதலில் பிடித்து உள்ளே சென்றேன். அங்குள்ள மனிதர்களை அப்படி ஒருதரம் நோக்கம் பார்த்துக்கொண்டேன். இரண்டொருவரை மெல்ல காக்காய் பிடித்து வைத்திருக்கிறேன். ஒரு பெரிய காரியம் ஆவதற்கு இந்த சில்லுண்டிகளெல்லாம் அத்யாவசியமல்லவா! அந்த ஒரு அங்கம் முடிவதற்கு இந்நேரமாயிற்று. அதற்குள் நீ ரக்கையில்லாமலேயே பறந்தால் நான் என்ன செய்வது?

முரளி:—சரி. சரி. போதும் உன் பீடிகை. அப்போது பாடிய அந்த அத்புத சுந்தராங்கி யாரு; அதை விசாரித்தாயா! சொல்லு.

நாக:—ஆகா! அதற்குத்தானே போனது. வெகு நன்ருக விசாரித்தேன். அவள் ஸ்ரீமதி இல்லை; குமாரிதான். ஆனல்...

முர:—என்னடா! ஆனல் ஒன்று போடுகிருய்?

நாக:—அவள் தேவதாசியின் குமாரியாம். அதனல்தான் சப்பிட்டுவிட்டது.

முர:—அட க்ரகசாரமே!...என்று பெருமூச்சுவிட்டான்.

நாக:—இருப்பா; இரு! பெருமூச்சுவிடாதே. நாளது 15-ந் தேதி மாலை 6-மணிக்கு ஒரு குமாரி பாடப்போகிருளாம். அவள் வெகு அழகாக இருப்பாளாம். பாட்டும் அழகுக்குப் போட்டிபோடுமாம். அவள் வெளியூர் ஆஸாமி. பெண்ணுக்கு யாரோ பந்துக்கள் இங்கிருக்கிருர்களாம். அங்குதான் வந்து இறங்குவார்களாம். பாட்டைக் கேட்பதற்கு முன்பே அங்கு சற்று அப்படி வேட்டையாடினல் பெண்ணைப் பார்த்துவிடலாம். மாலை சங்கீத விருந்தையும் அனுபவிக்கலாம். பிறகு நேராக விஷயத்தைப் பேசிக்கொள்ளலாம். இத்தனை தகவல்களையும் அங்குள்ள ஒருவன்மூலம் விசாரித்துக்கொண்டுவந்தேன். அதை விசாரிப்பதற்காகத்தான் ஒரு வீணை வித்வானை முதலில் காக்காய் பிடித்துக்கொண்டு அவருடன் நுழைந்தேன். அப்படிக்கிருக்க என்னைப் பின்னும் விரட்டுகிருயே?

முர:—சரி. கோபித்துக்கொள்ளாதேப்பா! சினேகிதனிடம் உள்ள சுதந்திரத்தில் சற்று ஆத்திரம் வந்துவிட்டது.

நாக:—அதுமட்டுமில்லேப்பா! கட்டை ப்ரம்மச்சாரியாயிருப்பதால் ஆத்திரம் வருவது சகஜந்தானே! சரி... இனிமேல் எனக்கு உத்திரவுதானு! நான் போய்வரட்டுமா! நேரமாகிவிட்டது. என் மனைவி காத்திருப்பாள்.

அதே சமயம் பார்வதியம்மாள் பெண்ணைப் பார்த்துவிட்டு வெகுத்ருப்தியுடன் ஆனந்த ச்வரூபமாக வந்தாள். முரளியும் நாகராஜனும் இருப்பதைக் கண்டு பூரித்தபடியே, "முரளீ! உன்னதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! இம்மாதிரி ஒரு அழகு தேவதை, சங்கீதத்தில் இசைராணி கிடைக்காமல் இத்தனை வருஷங்களாக அலைந்த எனக்கு பகவான் இன்றே கிருபை செய்தார். பெண்ணைப் பார்த்தாலும் பசி தீரும்; சங்கீதத்தைக் கேட்டாலும் கலிதீரும். சீர்வகைகளோ சொல்லமுடியாது. மனிதர்களின் குணமோ தங்கக்கம்பிதான். பெண்ணின் தாயாருடைய அழகை சொல்லவே முடியாது. அம்மாதிரி அழகே உருக்கொண்ட குடும்பம் அகப்படுவதே அரிது. நாகராஜா! நீயும் முரளியும் வருகிறீர்களா! பெண்ணைப் பார்த்துவிட்டுவரலாம்" என்ருள்.

ஏற்கெனவே ஒரு யோசனையிலாழ்ந்திருக்கும் வாலிபர்கள் ஒருவர் முகத்தையொருவர் பார்த்தார்கள். 'போகலாமா! வேண்டாமா!' என்று சிறிது குழம்பினர்கள். "சரி; இருட்டிவிட்டது. இப்போது பார்ப்பதில் பலனில்லை. நாளைக்குப் போகலாம்" என்ருன் முரளி.

பார்:—நாளைக்கு சனிக்கிழமை. முதல் முதல் நீ சனிக்கிழமையிலா பார்ப்பது? இருட்டினல் என்ன! பாதகமில்லை. பெண்தான் ரதி என்ருல் ரதி. பவுடர் வேஷமும் செயற்கை ஒழுங்கும் அவளிடமில்லை. புறப்படு; போகலாம் உடனே முடிக்காவிட்டால் வேறு போட்டிவந்துவிடும். எழுந்திரு. இதை முடித்து விட்டால்தான் எனக்கு மனது நிம்மதியாகும்.

எப்படியும் தனது விருப்பம் தன் தாயாருக்கு நன்ருய்த் தெரியுமாதலால் தனக்குப் பிடித்தமாதிரிதான் பார்த்திருப்பாள் என்று தீர்மானித்துக்கொண்டு முரளி சிரித்தவாறு, 'சரி. நாகராஜா! கிளம்புடா; போவோம்' என்று எழுந்தான்.

எல்லோரும் புறப்படும் சமயம் முதலில் வந்த கல்யாணத் தரகர் எதிரில் வந்ததைப்பார்த்து, "ஒத்தைப் பார்ப்பான் வருகிறனே" என்று எரிச்சலுடன் 'உள்ளேவந்து உட்கார்ந்துவிட்டுப் போங்கள். வருகிறவர் என்ன விஷயம் கொண்டுவருகிறரோ! பார்க்கலாம்" என்று பார்வதி உட்கார்ந்தாள்.

வந்த மனிதனின் முகத்தில் உத்ஸாகத்தைக் காணவில்லை. முகம் தொங்கியது. "என்ன போங்கள், அந்தப் பெண்ணுக்கு உங்கள் வீட்டில் வாழ்க்கைப் படுவதற்கு பாக்யமில்லை என்றுதான் சொல்லவேண்டும். பெண்ணின் அத்தையும் பாட்டியும் ஒரே பிடிவாதமாக **தலைச்சனும் தலைச்சனும் மணக்கக்கூடாது** என்று கூறுகிறர்கள். **தலைச்சனும் தலைச்சனும் தலைசேர்த்துப் படுத்தால் நிலைத்துக் குடும்பம் நீடித்து விளங்காது** என்று பழமொழியைக்கூறித் தடுத்துவிட்டார்கள். பெண்ணின் தாயாருக்கு விசனங்கூட வந்துவிட்டது. என்னசெய்வது? நீங்கள் கொடுத்த வைரமோதிரத்தைத் திருப்பியிருக்கிறர்கள்" என்றர்.

இதைக் கேட்டதும் பார்வதியம்மாளுக்கு சப்த நாடியும் அடங்கிப் போனது போலாகியது. அதோடு 'சரிகை ரவிக்கைத்துண்டு போய்விட்டதே...ஒருநாளுமின்றி இன்று திருநாள்போல் ரவிக்கையைக் கொடுத்து ஏமாந்துபோனேமே!' என்கிற துக்கம்தான் அதிகமாகப் பாதித்தது.

6

டீச்சர்! டீச்சர்! இதோபாருங்கோ! ரேடியோ நிலயத்திலிருந்து எனக்கே கடிதம் வந்துவிட்டது. இதை முதலில் உங்களுக்குக் காட்டுவதற்காகக் கொண்டு வந்தேன். பாட்டுகள் லிஸ்டு அனுப்பச்சொல்லியிருக்கிறர்கள். டீச்சர்! நீங்களே பாட்டுக்களைப் பொருக்கிக்கொடுத்துவிடுங்கள். இன்றே கடிதத்துடன் அனுப்பி விடுகிறேன்" என்று க்ருபாவதி அலைமோதும் சந்தோஷத்துடன் கூறினள்.

அங்கிருந்த சில சிறுமிகளும் உபாத்தியாயினிகளும் வெகு வியப்புடன் க்ருபாவதியைப் பார்த்து ஒருவிதமான உணர்ச்சியுடன் சிரித்தார்கள். "பேஷ்: க்ருபாவதி! நீ இனி பெரிய கச்சேரிக்காரியாக ஆய்விட்டாய். ஒருமணிகாலம் கூட இல்லை, அதற்கு முப்பதுரூபாய் என்றல் கச்சேரிக்கு நூற்றுக் கணக்கில் தான் வாங்குவாய். இனிமேல் சங்கீதத்தை விருத்திசெய்யும் மும்முரத்தில் பள்ளிக்கூடத்தைக்கூட நிறுத்திவிடுவாய் என்றுதான் தோன்றுகிறது." என்று ஒரு டீச்சர் சொல்வதைக் கேட்டு க்ருபாவதியின் தலைகவிழ்ந்து வெட்கமும் சந்தோஷமும் சேர்ந்து பாதித்ததைக் கண்ட க்ருபாவதியின் டீச்சர், அவளை முதுகில் தட்டிக்கொடுத்து, "கிருபாவதி!...யார் எது வேண்டுமாயினும் சொல்லட்டும். இதனல் உனக்கென்ன குறைந்துவிடப்போகிறது. சங்கீதம் ஒரு உயர்ந்த உத்க்ருஷ்டமான கலை. அதோடு கலைத்தாயாகிய வாணியின் வரப்ரஸாதம், தேவதாஸாரம். ஸாமகானத்திலிருந்து சிதறிய திவலைகள். பசு பக்ஷிஜாதிகள் முதல் மயங்கித் தியங்கி அடிமையாகிவிடும் அபூர்வ சக்தி வாய்ந்தது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அதரமலரிலிருந்து மது ஒழுகுவதுபோல் ஒழுகி சகல ஜீவராசிகளையும் மயங்கச்செய்த மகிமை பொருந்திய மதுரகீதத்தின் பெருமையை யார்தான் கைப்பற்றக்கூடாது? நீ பள்ளிக்கூடத்தை விட்டாலும் சரி அல்லது வந்தாலும் சரி. உன் சங்கீதத்தை உயர்தரக் கச்சேரி சங்கீதமாகச் செய்ய நான் பின்னடையப் போவதில்லை. என்னுடைய மாணவிகளில் ஒருத்தியாவது சங்கீதத்தைப் பூர்ணமாகப் பயன்படுத்தி நல்ல கீர்த்தியும் பெயரும் பெற்றள் என்கிற ஒரு தனிப்பெருமையே எனக்குப்போதுமானது. கிருபாவதி! நீ என் விடுதிக்கு வா. இன்றேபாட்டுக்களையும்பொருக்கி அனுப்பிவிடலாம்'என்று தைரியமும் உத்ஸாகமுமான மொழிகளைக் கூறி அவளை அழைத்துச் சென்றள்.

கிருபாவதியின் சந்தோஷம் எல்லைகடந்தது. "டீச்சர்! இதோ இந்தக் காகிதத்தில் லிஸ்டு எழுதிவிடுங்கள். என்னபாட்டு முதலில் பாடலாம் டீச்சர்!' என்றள்.

டீச்சர்:—அடிக்கடி எல்லோரும் பாடிப் பாடிக் கேட்டுப் புளித்துப் போன பாட்டுக்களை நீ பாடவேண்டாம். இதுவரையில் யாரும் பாடாத வெகு

அத்புதமான கீர்த்தனைகளையே நான் பொருக்கித்தருகிறேன். பிறகு ரேடியோவில் அனேகர் அதையே பாடுவார்கள் பாரு. முதலில் விநாயகக்கடவுள்மீதுள்ள **'நீவே பாலிம்பரா'**...என்ற கீர்த்தனையைப் பாடு. இதை காலம் சென்ற சங்கீத வித்வான் **பிடாரம் க்ருஷ்ணப்பாவிடம்** கேட்டதைத் தவிர பிறகு யாருமே அப்படிப் பாடவில்லை. நூற்றுக்கொருவர் அபூர்வமாகப் பாடுகிருர்களோ என்னவோ! அதுவும் ரேடியோவில் நான் கேட்டதில்லை. இரண்டாவது **அடாணு** ராகத்தை சாரத்துடன் ஆலாபனை செய்து, **ஏ பாபமு, ஜேசிதிரா!**...இந்த அதி அத்புதமான கீர்த்தனையைப் பாடு. மூன்ருவது **சஹானு** ராகத்தை ஆலாபனம் செய்து **"ரகுபதே ராமா ராக்ஷஸபீமா!"** என்கிற கீர்த்தனையைப் பாடி நாலாவர்த்தம் ஜம்மென்று ஸ்வரம்பாடு! கடைசியில் **ஸ்ரீராகத்தை** ஆலாபனை செய்து **'நீவே நாகதியம்மா'**...என்கிற பாட்டைப்பாடி முடித்துவிடு. உனக்குள்ள நேரத்திற்கு இத்தனைதான் பாடமுடியும். இதற்கே நேரம் போதாதுபோனலும் போகும். அப்படி மேலே சில நிமிஷங்கள் நேரம் மிச்சமிருந்தா இப்போது நீ பழகிவரும் **உலகளந்த உத்தமா! உன் பொன்னடிகள் போற்றி** என்கிற பாடலைப் பாடு... என்ன, தெரிந்ததா? தபாலுக்கு நேரமாயிற்று. இப்போதே எழுதியனுப்பிவிடு'' என்ருள்.

கிருபாவதி கட்டுமீறிய சந்தோஷத்துடன் ஒரே ஓட்டமாக ஓடிவந்து "மாமா!... எங்க டீச்சர் எனக்குப் பாட்டைக்கூட பொருக்கிக் கொடுத்துவிட்டார். இதோ லிஸ்டு. கடிதம் எழுதிவிட்டீர்களா?'' என்ருள்.

சதாசிவனும் ஆனந்தத்துடன் கடிதமெழுதி கிருபாவதியின் கையெழுத்துடன் கீர்த்தனைகளின் ஜாபிதாவும் சேர்த்துத் தபாலில் போடப் புறப்பட்டார். அன்றுண்டாகிய இப்புதிய சந்தோஷத்தில் கிருபாவதி தான் வழக்கமாகச் செய்யும் வீட்டு வேலைகளைக்கூட மறந்துபோனுள். "நான் ரேடியோவில் பாடிய உடனே எனக்கு நிகரிலாத புகழும் கீர்த்தியும் வந்துவிடும். நம் தாயாரை சமையல்செய்து பிழைக்கும் தொழிலிலிருந்து மீட்டிவிடலாம். மாதம் ஒருதரம் பாடினுல்கூட 30 ரூபாய் ஜாம் ஜாம் என்று கிடைத்துவிடும். அதைக்கொண்டு இரண்டுபேர் ஜீவிக்கமுடியாதா...பேஷாய் முடியும். அப்போது நாம் மாமிக்குப் பயந்தும் வசவு வாங்கியும் கைக்கட்டியும் சலாம்போடவேண்டாம்'' என்றெல்லாம் எண்ணியபடியே உடனே தாயாருக்கு, தான் ரேடியோவில் பாடப்போவதாயும் அதைக்கேட்க இங்குவந்துவிடும்படியும் இனி சமையல்வேலை யார் வீட்டிலும் செய்யவேண்டாமென்றும் தனக்குத் தோன்றியபடி எல்லாம் கடிதமெழுதித் தபாலில் போட்டாள்.

வழக்கமாக காப்பி, பால் பாத்திரங்கள் தேய்த்தும் பூஜாபாத்திரங்களை சுத்திசெய்து, பூஜா அறையில் விளக்குத் துடைத்து ஏத்தியும், சிம்மிணி விளக்குகளைத் துடைத்து எண்ணெய் போட்டுவைத்து, பால்காரனிடம் பாலை வாங்கி ஜாக்கிரதையாக வைத்தும், புஷ்பம் பறித்து வைத்திருப்பதைக் கட்டி ஸ்வாமி படத்திற்குச் சாத்தியும் இன்னும் இதர காரியங்களைச் செய்யும் கிருபாவதி இன்று உண்டாகிய புதிய சந்தோஷ உணர்ச்சியில் அதைப்பற்றியே நினைத்துக்கொண்டு வழக்கமான காரியங்களை எல்லாம் மறந்துபோய் விட்டாள்.

தான் பாடப்போகும் பாட்டை வெகு அழகாகவும் உணர்ச்சி ததும்பவும் பாடிப் பார்த்துக்கொள்ளும் சந்தோஷத்தில் பேதைப்பெண் தன்னையே மறந்து இயற்கையாகப் பாடிக்கொண்டிருந்தாள். மாமாவும் தபாலாபீஸுக்குப்போய் கடிதங்களைப் போட்டுவிட்டு வரும் வழியில் தனக்கு மிகவும் ஆப்தமான சினேகிதர்களிடமெல்லாம் வெகு உத்ஸாகத்துடனும் பெருமையுடனும், "சார்! நம்ம க்ருபாவதிக்கு ரேடியோவிலிருந்து பஸ்டுக்ளாஸ் சான்ஸ் வந்திருக்கிறது. 15-ந் தேதியன்று குழந்தை அத்புதமாக கானமழையைப் பொழிந்து ரஸிகர்களின் உள்ளத்தை உருக்கிப் பரவசமூட்டிப் பேராதரவும் அபிமானமும் பெற்றுவிடப் போகிருள் சார்! ஏதோ! தகப்பனில்லாத பரதேசிக் குழந்தையை எந்தவிதமாகவாவது முன்னுக்குக் கொண்டுவந்துவிட்டால் போதும். சார்!

மதுர கீதம் உங்களுக்கு... நித்யஸேவை பத்ராதிபர் நன்ருகத் தெரியுமே, அவரிடம் சற்று சொல்லி அன்று ஸ்பெஷலாகக் கேட்டு அவருடைய பத்ரிகையில் நன்ருக எழுதச் சொல்லவேணும். பரதேசிக் குழந்தைக்கு நீர் இந்த உதவிசெய்தால் போதும்.'' என்று கபடமற்ற பரிசுத்தமான துல்லிய அன்புடன் கூறினர்.

இதுகேட்ட **சேஷய்யர்** உண்மையிலேயே பரம சந்தோஷமடைந்தவராய் ''அப்படியா! மிக்க சந்தோஷம் சார்! அவளுடைய மதுர கண்டத்திலிருந்து பெருகும் அமிருதகானத்தைப் பரிமளிக்கச் செய்யாதிருப்பது முட்டாள்தனமல்லவா! அவளுடைய மதுரகீதத்தை மெச்சிய கலாதேவியேதான் இந்த எதிர்பாராத அதிர்ஷ்டத்தைக் கொடுத்துவிட்டாள்போலிருக்கிறது. நான் நாளையே அந்த பத்ரிகாசிரியரைப் பார்த்து தடபுடலாக எழுதச் சொல்லுகிறேன். அதன் பயனுக அடிக்கடி சான்ஸ் கிடைப்பதோடு அந்த நிலயத்திலேயே நிரந்தரமான உத்யோகம் கிடைத்தாலும் கிடைக்கலாம், என்ன சொல்லுகிறீர்?'' என்ருர்.

சதாசிவம் அளப்பரிய ஆனந்தத்துடன் அதை ஆமோதித்தவாறு வீட்டிற்கு வந்தார். வீதியில் வரும்போதே **''நீ பாதமுலனு கந மொராலிடின''**...என்கிற இசைவெள்ளத்தைக் கேட்டு மெய்சிலிர்த்துப் பரவசமாகியவாறு உள்ளே வந்து ''ஆ ஹா...என்ன அத்புதகானம்!...கிருபாவதியின் அதிர்ஷ்டத்திற்கு இந்த மதுரகீதம் ஒன்றே போதாதா!'' என்று தனக்குள் வியந்தவாறு வெளியிலேயே உட்கார்ந்து அந்த அத்புதகானத்தில் லயித்தார்.

அச்சமயம் ''கிருபாவதீ! கிருபாவதீ!'' என்று செல்லம்மாள் சற்று கடுமையான த்வனியில் கூப்பிடும் குரலைக் கேட்ட சதாசிவத்திற்குக் கோபமுண்டாயிற்று. குழந்தை ஆனந்தமாகப்பாடுவதைக் கலைக்க இஷ்டமில்லாதவராய் தானே எதிரில் வந்து, சற்று கடுத்த முகத்துடன், ''ஏன், இந்த இன்பநாதம் உனக்குக் காது கேட்கவில்லையா! பாடும்போது தாக்காய்மாதிரி ஏன் கத்துகிருய்! இப்போது எந்த குபேரப்பட்டணம் கொள்ளைபோய்விடுகிறது. போ! போ! வரட்டுத்தவளையைப்போல் கத்தவேண்டாம். குழந்தை பாடி முடித்துவிட்டுத் தானே வருவாள்'' என்று கூறினர்,

ஏற்கனவே கோபத்துடன் இருக்கும் செல்லத்திற்கு பின்னும் தீப்பிடித்தது போல் பற்றிக்கொண்டது. ''ஐயோ! எழவே! இனிமேல் வீடு விடிந்தமாதிரிதான். கொட்டு மலடு என்கிற பெயர் போதாமல் செவிடு என்கிற பட்டமும் இன்று புதிதாக வந்ததா! என் தலைவிதி நான் நல்லிதைச் செய்தாலும் நஞ்சாகமுடிகிறது. பள்ளிக்கூடப் படிப்பு, கூத்தாடி வேஷம் இரண்டும் போதாது, கச்சேரிக்கும் தயாராகும்போது என்ன குறைவு இருக்கிறது. நீங்கள் என்னை மிருகத்திற்குச் சமமாக நினைத்தாலும் சரி; மனுஷியாக நினைத்தாலும் சரி. கிருபாவதியிடம் எனக்கும் அக்கரையும் பாசமும் உண்டு. அவளை நல்ல வழியில் பழக்க எனக்குள்ள கடமையை நான் விடமாட்டேன். ஆண்பிள்ளைகளுக்கு என்ன தெரியும். நீங்கள் என் ஜோலிக்கு வரவேண்டாம். உங்கள் தம்பிமகன் கல்கத்தாவிலிருந்து வந்ததும் அவனுக்கே இவளை மணம் செய்யவேண்டுமென்று சொல்லிவரும் வார்த்தைகூட மறந்துவிட்டதா! அவனுக்கு இந்தக் கூத்தாடித்தனமெல்லாம் பிடிக்காது என்பதும் மறந்துவிட்டதோ! போதும் உங்கள் அன்பு... அடி கிருபாவதி! கிருபாவதி!' என்று பெருத்த அதிகாரமும் கோபமும் ஜ்வலிக்கும் த்வனியில் கூப்பிட்டவாறு தடதடவென்று கிருபாவதி பாடும் அறையை நோக்கிச்சென்ருள். இதைப்பார்த்த சதாசிவனுக்குக் கோபம் தலைக்குமேல் பிறிக்கொண்டு வந்தது.

18307

வை. மு. கோ.

59-வது நாவல்

புதிய பதிப்பு.

வாத்ஸல்யம்

அல்லது

வாக்குதத்தம்

ரூ. 1—12—0.

சித்திர ரகளை

பெரும்பாலும் பொருத்தமற்ற 'ஜோடி'களுக்கே விவாகம் நடக்கிறது. பணம் பத்தும்செய்யும் என்பார்களே அதனாலா ? அல்லது ப்ராரப்த கர்மம் என்பார்களே அதனாலா?...ஒற்றுமையும் சமாதானமும் நிலவியிருந்தால் அதுவே போதுமானது. -(ஸ்ரீவத்ஸன்)



'நந்தனார்,' 'ரிஷ்ய சிருங்கர்' படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்."

Ranjan

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸூஸ் டீ

M. N. K.—15 TM.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRE... M, SINGAPERUMALKOIL, B. O.